www.padippakam.com

# தொழிலாளர் பாதை

DM 1

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 20 ★ டிசம்பர், 1988 ★

## உள்ளே

★ அக்டோபர் 19 நெருக்கடியின் ஓராண்டு — பக்கம் 3

★ அமெரிக்க டிராட்ஸ்கிஸ்டுகளுக்கு 20,000 வாக்குகள் — பக்கம் 4

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னோக்கின் தீர்மானங்கள் — பக்கங்கள் 5, 6, 7, 8, 9, 10

## தோழர் ஆர். எ. பீட்டவலவின் நினைவு நீடூழி வாழ்க!

# ஜே.வி.பி. பாசிஸ்டுகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டு!

# இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை கசுக்கிதெறி!

### நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவானது தோழர் ஆர்.ஏ, பீட்டவலவுக்கு, அதன் புரட்சிகர மரியாதையை செலுத்துகிறது; அவர் 14 வருடங்களாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஒரு உறுப்பினராக இருந்தார். அவர் நவம்பர் 12ல் ஜே.வி.பி. யின் இனவாத எதிர்ப்புரட்சி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டார்.

சுமார் 10 ஜே.வி;பி. உறுப்பினர்களைக் கொண்ட கொலைகார குழுவொன்று மாலை 7-30 அளவில், தோழர் பீட்டவலவின் வீட்டினுள் பலவந்தமாக புகுந்து, அவரது மனைவியும் பிள்ளைகளும் வீட்டை விட்டு வெளியேறுத வாறு தடுத்து பின் தோழர் பீட்டவலவை வெளியே எடுத்துச் சென்றனர்.

கொலைகாரர்கள், அவரை சுமார் ஒரு மைல் தூரம் வீட்டிற்கு அப்பால் நடத்திச் சென்று, தலையில் சுட்டபின், அவரது உடலை ஒரு விளக்குக் கம்பத்தில் தூக்கினர். அவரின் உடல் அடுத்த நாள் கண்டெடுக்கப்பட்டது.

தோழர் பீட்டவல 36 வயதுடையவராகவும். மூன்று பிள்ளைகளின் தந்தையாகவும் இருந்தார்

ஏன் இந்த டிராட்ஸ்கிச போராளியை கொலைசெய்ய, ஜே.வி.பி எதிர்ப் புரட்சிகர கொலைகாரர்கள் தீர்மானித்தார்கள்? அது ஏனென்றால் அவர் மிகத்துணிகரமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அதாவது ஜே.வி.பி குட்டி முதலாளித்துவ சிங்கள இனவாதிகளின் தீவிர வலதுசாரி கொள்கைகளுக்கு எதிராகவும், யு என்.பி. அரசாங்கத்தினதும், முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் (எஸ்.எல் எப் பி ) ராணுவ—போலீஸ் சர்வாதிகார திட்டங்களுக்கு எதிராகவும் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதில் ஈடுபட்டிருந்தார்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துக்கும், தமிழ் பேசும் தோட்டத்தொழிலாளர்களுக்கும் மேலாக, சிங்கள முதலாளித்துவ ஒன்றிணைக்கப்பட்ட அரசின் (unitary state) அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக ஜே.வி.பி. னால் தொடுக்கப்பட்ட தொழிலாள விரோத பயங்கரவாத நடவடிக்கைகளின் மத்தியிலேயே தோழர் பீட்டவல கொலை செய்யப்பட்டார். மேலும், இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் தாக்கத்தை தொடரும் யு.என்.பி. அரசாங்கம், ஜே வி.பி. யின் ஆத்திரமூட்டல்களை சாதகமாக பயன்படுத்தி, ஒருராணுவ—போலீஸ் சர்வாதிகாரத்திற்கான அதன் சொந்ததயாரிப்புகளை அதிகரித்து வருகின்றது.

தோழர் பீட்டவல மீதான தாக்குதல், ஏகாதிபத்தியத்தின் நலன்களின் சார்பிலும், அவர்களுடைய, பிராந்திய முதலாளித்துவ ஏஜண்டுகளின் சார்பிலும் பாசிச தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கும் ஒரு குட்டி முதலாளித்துவ கொலைகார இயக்கத்தின் நடவடிக்கையாகும். அதனால், இது சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு எதிராகவும் இலங்கையில் உள்ள தொழிலாள வர்க்கம், தமிழ் தேசிய இனம், ஒடுக்கப்படும விவசாயிகளுக்கும எதிரான வர்க்க எதிரியின் ஒரு தாக்குதலாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஒரு நீண்ட கால உறுப்பினரான தோழர் பீட்டவல, இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் ஓர் உறுப்பினர் ஆவார். அவர் ஊவா—பரமகம மற்றும் பதுளை பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் இலஙகை ஆசிரியா சங்கத்தினுள்ளும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் (ICFI) வேலைத்திட்டத்திற்காக போராடுவதில் ஒரு முக்கியமான பங்கை வகித்தார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஒரு உறுப்பினராக அவருடைய அரசியல் வாழ்க்கையின ஆரம்பத்திலிருந்தே தோழர் பீட்டவல, தொழிலாள வர்க்கத்தின் எதிரிகளின் தாககுதலுக்கு இலக்காக இருந்தார். முதலில் 1970-77ல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி—லங்கா சமசமாஜக் கட்சி—கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டு அரசாங்கத்தினால், அதன்பின் யு.என்,பி, ஆட்சிக்கு வந்தபின் அரச இயந்திரத்தினால், இறுதியாக ஜே.வி.பி யினாலாகும.

தோழர் பீட்டவலவை ஜே.வி.பி. கொலைகாரர்கள் கொலை செய்தார்கள் ஏனென்றால் அவர்கள் அவரை பயமுறுத்தி அவர்களுடைய பிற்போக்கு பயங்கரவாத பிரச்சாரத்திற்கு அடிபணிய செய்ய வைக்கும் முயற்சிகளில் தோல்வி கண்டனர். அவர், தனது முழு சக்தியையும திரட்டி ஜே.வி.பி யின் இனவாத அரசியலை பகிரங்கமாக எதிர்த்தார்; அவருடைய கிராமத்தில் அவர் மட்டுமே, துப்பாக்கி முனையில் ஜே வி பி. யினால் தமிழ் விரோத அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலங்களிலோ, மறியல் போராட்டங்களிலோ கலந்து கொள்ள மறுத்தார்.

கிராம மக்கள் மத்தியில் அவருடைய முன் உதாரணத்தினால ஏற்படும் தாக்கத்தை பற்றி அஞ்சிய ஜே. வி. பி. இனவாதிகள், தோழர் பீட்டவலவை, அவர்களுடைய கொள்கைகளுக்கு பகிரங்கமாக அடிபணிய செய்ய நிர்ப்பந்திப்போமென சபதம்

★2ம் பக்கம் பார்க்க

## தோழர் கீர்த்தி பாலசூரியாவின், தோழர் ஆர். எ. பீட்டவலவின் நினைவுக் கூட்டம்



தோழர் கீர்த்தி பாலசூரியா
1948—1987

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைவர்களில் ஒருவரும் அதன் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்முன்னாள் செயலாளருமான தோழர் கீர்த்தி பாலசூரியா திடீரென மாரடைப்பினால் இறந்து ஒரு வருடமாகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில அவர் உலக சோசலிசப் புரட்சியின் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினை கட்ட தீர்க்கமான பெரும் பங்கு ஆற்றினார்.

தோழர் பீட்டவல, மரண அச்சுறுத்தல்களின் மத்தியிலும புரட்சிகர டிராட்ஸ்கிச கொள்கைகளை விட்டுக்கொடுக்காது போராடியதன் காரணமாக இலங்கையில் இனவாத பாசிச ஜே.வி.பி. யின் துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியானார்-

உலக பாட்டாளிவர்க்கத்தின் ஐக்கியத்திற்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடிய இந்த புரட்சிகரப் போராளிகளை சோசலிசத் தொழிலாளர் கழகம் ஆழ்ந்த மரியாதையுடன் நினைவு கூருகிறது.

இடம் : கலைவாணி நர்சரி பள்ளி, படவீட்டம்மன்கோயில் தெரு, ஓட்டேரி, சென்னை-12

நேரம் : ஜனவரி 1, 1989, மாலை 5 மணி

## ஈழத்திலிருந்து மாலத்தீவிலிருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்றப் போராடும்படி ஸ்டாலினிச சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி!

படிப்பகம்

# தோழர் பீட்டவலவின் நினைவு நீடூழி வாழ்க!

செய்தனர். இப்படியான அதிகரித்த பயமுறுத்தல்கள் இருந்த பொழுதிலும், தோழர் பீட்டவல, மற்றுமொரு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினருடன், நவம்பர் 5-ல், ஜே.வி.பி, க்கு எதிராக வீட்டுக்கு வீடு பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். அவர், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சிங்கள, தமிழ் பத்திரிகைகளான கம்கறு மாவத்த, தொழிலாளர் பாதையின் பிரதிகளை விற்ருர். அரசாங்கத்தின் ராணுவ தயாரிப்புகளையும் மற்றும் குட்டி முதலாளித்துவ ஜே.வி.பி.யின இனவாத அரசியலின் எதிர்புரட்சிகர விளைபயன்களைப் பற்றியும் தொழிலாளர்களையும், வறிய விவசாயிகளையும், இளைஞர்களையும் அவர் எச்சரித்தார். இப்படியான அச்சுறுத்தல்களை தோற்கடிக்க ஒரு புரட்சிக்கட்சி கட்ட வேண்டிய தேவையை தோழர் பீட்டவல வலியுறுத்திஞர்.

கொலை செய்யப்பட்டபின், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு கிடைத்த தகவலின்படி, கிராம மக்கள் மத்தியில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை இழிவுபடுத்தும் நோக்கத்துடன ஜே.வி.பி. கொலைகாரர்கள், குற்றங்களை செய்ததாக 10 பொய்க் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு கையெழுத்திடும்படி தோழர் பீட்டவலவை நிர்ப்பந்தித்தனர். மரணத்தின் முன்னிலையிலும, அவர் மிக துணிகரமாக, ஜே.வி.பி.யின் கோரிக்கைக்கு அடிபணிய மறுத்தார்.

ஜே.வி.பி. யின் பயங்கரவாதத்திற்கு அந்தக் கிராமம் உட்படுத்தபபட்டிருந்ததால், அவருடைய மரணத்திற்கு மறுநாளே அதுவும புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அவருடைய கொலையைப்பற்றி அறியு முன்னரே, தோழர் பீட்டவலவின் குடும்பம அவருடைய மரணச்சடங்கை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இருப்பினும சுமார் ஆயிரக்கணக்கானேர் தங்களுடைய இறுதி மரியாதைகளை செலுத்த வந்தனர், இதன் மூலமாக புரட்சிக் கம்யூனிஸ்ட கழகத்தின் ஒரு உறுப்பினராக தொழிலாளர்கள் நாட்டுப்புற ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் தோழர் பீட்டவல பெற்ற அரசியல் கௌரவம் பிரதிபலித்தது.

டிசம்பர் 1987 ல், புரட்சிக் கம்யூனிஸட் கழகத்தின் முன்னைய பொதுச் செயலாளரான கீர்த்தி பாலசூரியாவின் திடீர் மரணத்திற்கு பின், குறுகிய காலத்தில், கட்சியின் கண்டி, பதுளை காலி, சிலாபத்தின மொத்தமாககூட்டப் பெற்ற கூட்டங்களில் தோழர் பீட்டவல உரையாற்றினார். கூட்டரசாங்கத்தின் குரூர ஒடுக்குமுறைககு உள்ளாகி இருந்த ஜே.வி.பி. யின் அரசியல் கைதிகளை விடுவிக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடத்திய பிரச்சார இயக்கத்தின்போது 1974-ல், அவர் கட்சியில சேர்ந்ததை நினைவு கூறினர், அந்த சமயத்தில், ஜே.வி.பி. இன்று இருப்பது போன்ற தொழிலாள விரோத இயக்கமாக சீரழியாது, இனமும் 1971-ன் நாட்டுப்புற இளைஞர்களின் எழுச்சியுடன் தன்னை அடையாளம் காட்டியது,

### ஜே.வி.பி. மரண அச்சுறுத்தல் விடுகிறது

தொழிலாள வர்க்கத்தின், மற்றும் அதன் புரட்சிகர தலைமையின் மீதான தாக்குதலின் ஒரு முக்கிய பாகமாக, ஜே.வி.பி அதன் தாக்குதல் பட்டியலில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் சேர்த்துள்ளது கடந்த சில மாதங்களில், பேராதனை பல்கலைக் கழக வளாகத்தினுள்ளும, கண்டி, அம்பலாங்கொட பிரதேசங்களிலும் செயலூக்கத்துடன் வேலை செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்களுக்கு எதிரான கொலை மிரட்டல்களை ஜே.வி.பி. விடுத்தது. அம்பலாங்கொடையில் ஜே.வி.பி, அது நிச்சயமாக கொல்ல எண்ணியுள்ள இரு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்களின் பெயர்களை கூறியது, தோழர் பீட்டவலவின் கொலை காட்டுவது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு எதிராக, ஜே.வி.பி. அதன் எதிர்ப் புரட்சிகர அச்சுறுத்தல்களை தற்போது அமுல் படுத்துகிறது என்பதாகும்.



கொழும்பில், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதின ஊர்வலம்

கடந்த மாதத்தில், சிங்கள முதலாளித்துவ ஒன்றிணைக்கப்பட்ட அரசைப்பேண, ஜே.வி.பி. அதன் பயங்கரவாத நடவடிக்கைகளை, வெறித்தனமாக அதிகரித்தது. இந்த குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் அண்மைக்கால வெறித்தனத்தின பின்னணியாக இருப்பது, உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பகுதியாக இலங்கையில் முதலாளித்துவ அமைப்பு முறையினதும், ஆட்சியினதும் ஆழமாகிச் செல்லும் நெருக்கடியாகும.

கடந்த வருடம், சிறிலங்கா முதலாளித்துவ அரசு அது 1948-ல் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் மிக பெரும் நெருக்கடியை எதிர்கொண்ட போது, உலக ஏகாதிபத்தியத்தின் சார்பில் செயற்படும் இந்திய முதலாளித்துவ வர்க்கம், தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், இலங்கையில் உள்ள தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக யு,என்.பி. அரசாங்கத்தை பலப்படுத்தவும், தனது ராணுவப் படைகளை அனுப்பியது இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானது, இந்தப் பிராந்தியத்தில் ஒரு வரிசையான முறைதவறிப் பிறந்த அரசுகள் என்ற வடிவில திணிககப்பட்டது. அது இபபோது முன்னெருபோதும் இல்லாத நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

உலகப்போரின் பின்பு ஏற்படுத்தப்பட்ட முழுமையான ஏற்பாட்டையும் அச்சுறுத்தும்படியாக தொழிலாளர்களின், வறிய மக்களின், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டங்கள் எழுச்சியுற்றுள்ளது. இப்படியான சூழ்நிலைமையில், இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப் புரட்சிகர மூலோபாயமானது, இந்தப் பிராந்தியத்தின் பிரதான போலீஸ்காரஞக இந்திய முதலாளித்துவத்தை பயன்படுத்துவதன் மூலயாக ஒரு புதிய மட்டத்தை அடைந்துள்ளது.

ஆனால் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்திய போதிலும், ஏகாதிபத்தியவாதிகளும், இந்தியாவிலும், இலங்கையிலும உள்ள ஆளும் வர்க்கங்களும் அவர்களது நெருக்கடியை தீர்ப்பதில் தோல்வி கண்டனர். தொடக்கத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள் ராணுவ பின்னடைவுகளை அனுபவித்தபோதிலும், தமிழ் தேசியப் போராட்டத்தை தோற்கடிப்பதில் இந்திய ராணுவம் தோல்வி கண்டது. தெற்கில் ஏகாதிபத்திய வங்கியாளர்களின், நாடு கடந்த கூட்டுக் கம்பனிகளின் தாக்குதல்களுக்கு தொழிலாளவர்க்கம் வேலை நிறுத்த நடவடிக்கைகளின் மூலம் பதிலளிக்கின்றனர். நாட்டுப்புற அரைப் பாட்டாளிகள் மற்றும் வறிய விவசாயிகள் மத்தியிலுமகூட ஒரு எழுச்சிகர மனேபாவம் வளர்ந்து வருகிறது.

யு;என்.பி. அரசாங்கம் ஒரு ஜனதிபதி தேர்தலுக்கான அறிக்கை விட்டதில், பாட்டாளி வர்க்கத்தை பின்னே இழுத்து வைத்திருப்பதில் தொழிலாள வர்க்கத்தின் துரோகத தலைமையிலும், குட்டி முதலாளித்துவத்தில் ஒரு தட்டினரிலுமே தங்கியிருக்கிறது அந்த சமயத்தில அரசாங்கம், ஒரு ராணுவ—போலீஸ் சர்வாதிகாரத்திற்கான அதன் தயாரிப்புகளை அதிகரித்துள்ளது. இவ்வாருன நிலைமைகளுக்குள்ளேயே, தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான அதன் வெறித்தனமான குட்டி முதலாளித்துவ சக்திகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் ஜே,வி,பி., அரசாங்கத்தின் எதிர்ப் புரட்சிகர திட்டங்களுக்கு உதவியளிக்கிறது.

ஜே.வி,பி. எதிர்ப்புரட்சிவாதிகள், தமிழ்தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறையைக் கோருகின்றனர்மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சிங்கள அரசையும், முதலாளித்துவ சொத்து உறவுகளையும் பேணும் ஒரு வேலைததிட்டத்தை தொழிலாள வாக்க இயக்கங்களையும் அதன் தலைமைகளையும் தகர்ப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய சிங்கள இனவாதக் கிளர்ச்சி சிறிலங்காவின் மற்றும் தமிழீழத்தின் தொழிலாளர் விவசாய சகோதரர்களிடையே கொலைப் போரை மூட்டி விடுகிறது.

அது ஒரு தேசியவாத இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்திலும் கூட ஈடுபட்டுள்ளது. அது வறிய இந்தியத் தொழிலாளர்களையும, விவசாயிகளையும் ஏகாதிபத்திய சார்பு ஆளும் வர்க்கத்துடன் ஒன்ருகச் சேர்க்கிறது.

ஒரு சர்வதேச சக்தியாக தொழிலாள வர்க்கத்தின புரட்சிகரப் பங்கையும, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின பணிகளையும அடிப்படையாகக் கொண்டு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்ப்பதல் தோழா பீட்டவல ஈடுபட்டிருந்தார். முழு இந்திய உபகண்டத்தையும சோசலிச, அடிப்படையில் இணைப்பதன் ஒரு பாகமாக சிறிலங்கா, தமிழ் ஈழத்தின் சோவியத் சோசலிச குடியரசுகளுக்காக போராடுவதே, இந்தப் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய மூல உபாயத்திற்கு எதிரான ஒரே ஒரு சாத்தியமான, நிலைக்கக் கூடிய முன்னேக்காகும என்பதை அவர் தெளிவாக புரிந்து கொண்டார்.

முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவ பிற்போக்கு இனவாத மூல உபாயத்திற்கு எதிரான போராட்டத்தின் அச்சாணியாக தொழிலாள வர்ககத்தின சர்வதேச ஐக்கியத்திற்கான போராட்டம் இருக்க வேண்டு என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார்; அது இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை தகர்த்து எறிந்து, தமிழ மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் இருந்து இந்திய மற்றும் சிறிலங்கா ராணுவங்களை வாபஸ் வாங்க நிர்ப்பந்தப்படையும, தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவளிப்பதையும, தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையை வென்றெடுப்பதையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சோசலிசத்திற்காக, அதன் போராட்டத்தில் தமிழ் தேசிய இனத்தினதும், ஒடுக்கப்படும் விவசாயிகளினதும் ஜனநாயகப் பணிகளை சோசலிசத்திற்கான அதன போராட்டத்தின மூலமாக தீர்க்கக்கூடிய முழுமையான வரலாறு சக்தி தொழிலாள வர்க்கம் என்பதை தோழர் பீட்டவல வலியுறுத்திஞா.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னேக்குகள் சம்பந்தமான அவர்களது மரண பயத்தையும், வெறுப்பையும், யு.என்.பி. அரசாங்கமும, அதன் கொலைகாரப் படைகளும் அதேபோல் ஜே வி.பி. இனவாதிகளும் தெளிவாக்கியது இது தான் முதல் தடவை அல்ல, ஜுலை 1979-ல், யு என்.பி. யினல் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு இனவாத தாக்குதல் அலையின் போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ராஜாங்கனை பிரதேச அமைப்பாளரான தோழர் ஆர்.பி. பியதாச குரூரமாக கொலை செய்யப்பட்டார்.

அப்போதிருந்து, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்களை வேட்டையாட அரசாங்கம் அதன் அரச இயந்திரத்தை பலதடவைகள் பயன்படுத்தியது. 1987 நவம்பரில், கொழும்பில், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களை கொல்லப்போவதாக யு.என்.பி. யினல் அணிதிரட்டப்பட்ட ஒரு குண்டர் படை மிரட்டியது.

### புரட்சிகர கிளர்ச்சி

இன்று, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புரட்சிகர கிளர்ச்சியானது, முதலாளித்துவ பிற்போக்குவாதிகளினல முழுமையாக பொறுக்க முடியாததாக மாறியுள்ளது. இது ஏனென்ருல், புரட்சிக் கம்யூனிஸ்ட கழகத்தின் முன்னேக்கு, தொழிலாள வர்க்கம் அதன் போராட்டத்தை சோசலிசப் புரட்சிக்கு வழிநடத்திச் செல்வதற்கான ஒரு நிச்சயமான வழிகாட்டலை வழங்குகிறது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்திற்காக தோழர் பீட்டவல, ஏனைய தோழர்களுடன் சேர்ந்து போராடினர். ராணுவ போலீஸ் பயமுறுத்தலும, பிற்போக்கான ஜே.வி.பி யின் கிளர்ச்சியும், எல்லாவற்றுக்கும மேலாக இந்திய—இலங்கை ஒப்பந்

★11ம் பக்கம் பார்க்க

**Subscribe to Tholilalar Pathai**

*Have it posted.*
*20 issues: DM 26,-*

*Write to:*
*Neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

Ecrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

*Subscription payable to account no. 211 85-431, Postgiroamt Essen (effected at any post office)*

படிப்பகம்

www.padippakam.com



# அக்டோபர் 19 நெருக்கடியின் ஓராண்டு

அக்டோபர் 19-ன் உலக ரீதியாக பங்குச் சந்தை பொறிவின் ஓராண்டு நிகழ்ச்சியில் முதலாளித்துவசெய்தி நிறுவனங்களும் இரு முதலாளித்துவ அரசியல் கட்சிகளும், கடந்த ஆண்டின் உருக்க் கரைந்த நித்நிலை அர்த்தமற்றது என்றும் முதலாளித்துவத்தின் எதிர்கால முன்னேற்றங்கள் அளவிட முடியாதது என்றும் மீண்டும் ஒருமுறை வார்த்தைகளை அள்ளி வீசி வருகின்றனர்.

எவ்வாறாயினும் அடுத்தடுத்து இடம்பெற்ற அபிவிருத்திகள், ஆண்டு நிகழ்ச்சிக்கு முன்னால், "கறுப்புத் திங்கள்" என்ற நிதிப்பேரழிவிற்கு உயர்த்திவிட்ட முதலாளித்துவ அமைப்பின் வரலாற்று நெருக்கடிகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

மேற்கு பெர்லினில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியமைப்பு, உலகவங்கி ஆகியவற்றினுடைய வருடாந்த மாநாட்டில், ஜப்பான், மேற்குஜெர்மனி பிரதிநிதிகள் அடுத்த அமெரிக்க நிர்வாகத்தினரை வர்த்தகத்திலும் பற்றுக்குறை பட்ஜெட்டிலும் அதசுப்படியான வெட்டைக் கொண்டு வருமாறு கோரும் வேளை, உலக சேமிப்பு நாணயததின் அமெரிக்க டாலர் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றி வெளிப்படையாகத் தாக்கியதால், மாநாடு கசப்பான பதில் குற்றச்சாட்டுக்களை வீசுவதாக வெடித்தது.

கடந்த வாரம் இறக்குமதி சாதனை அளவை முறியடித்து சென்றதால், 12. 18. பில்லியன் டாலராக அமெரிக்க வர்த்தகப் பற்றுக்குறை மீண்டும் ஒருமுறை ஊதிப்பருத்தது இதன் காரணமாக டாலர் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது,

மெக்சிகோ அரசாங்கம் 104 பில்லியன் வெளிநாட்டுக் கடனை அடைக்க முடியாமல் சீரழிந்து போனநிலையை சீர் செய்யுமுகமாக, அமெரிக்க கருவூலத்துறை அதற்கு அவசரம் அவசரமாக 5.5 பில்லியன் டாலர் கடன் கொடுத்துள்ளது.

பெரும்பாலான முதலாளித்துவ செய்தி நிறுவனங்கள் வருங்காலத்தைப்பற்றி நம்பிக்கையுள்ள வகையில் குரலை உயர்த்துகின்றபோதும், அதில் குறைந்தபட்சம் ஒரு பகுதியில் இந்த ஓராண்டு நிறைவு தினம் மனநதிறந்து பேசுவதற்கான ஒரு நிகழ்ச்சியாகஇருந்தது. அமெரிக்கநிதி மூலதனத்தின் குரலான 'த வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' (The wall street Journal) பத்திரிக்கை தனது நீண்ட ஆசிரிய தலையங்கத்தை "கறுப்புத் திங்கள் மீண்டும் வருகை" என்ற தலைப்புடன் வெளியிட்டது. அது கம்யூட்டர் வியாபாரம் அல்லது மற்ற தொழில்நுட்பப் பிரச்சனைகளை, நெருக்கடிக்குக் காரணமாக கறபிக்குமளிமையான முயற்சிகளை நிராகரித்தது. பதிலாக அது எழுதியது: "உள் இயங்கும் செயல் நுட்பங்கள் நெருக்கடிக்கான விளக்கத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு போதும் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக கறுப்புத் திங்களில் உலகம்முழுவதிலும் உள்ள சந்தைகளில் பொறிவு ஏற்பட்டது. திட்டமிடப்பட்ட வியாபாரங்களைக் கொண்டிருந்தது அல்லது எவ்வளவு விசாலமாக அவை கம்யூட்டர் மயப்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பொருட்படுத்தாது சந்தைகள் பொறிந்தன......மிக அடிப்படையான சில விஷயங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக நாம் நம்புகிறோம்.

"அக்டோபர் 19 நெருக்கடி, ஒன்றை ஒன்று சார்ந்த உலகப் பொருளாதாரத்தை நிர்வாகம் செய்வதற்கான முயற்சியின் மரண வேதனைகளுள் ஒன்றாக இருக்கிறதென்பது, முன்னரும் இப்பொழுது இன்னும் அதிகமாகவும் நமக்குத் தெரிய வந்துள்ளது, கம்ப்யூட்டர் மற்றும செய்தித் தொடர்பு தகவல்களின் புரட்சியானது- ஓரிடத்து உலகச்சந்தையைத் தோற்றுவித்துள்ளதுடன் அது தேசிய எல்லைகளைக் காலத்துக்குப் பொருந்தாததாக்கி விட்டது, ஆனால் அரசாங்கத்தின் உலக ரீதியான சாதனங்கள் அதற்கேற்றாற் போல் அடி எடுத்து வைக்கவில்லை இந்தவகையான இணைப்பில்லாத சநதியில தான் பொருளாதாரப் பேரழிவிற்கான சந்தர்ப்பம் தங்கியிருக்கிறது. (எமது அழுத்தம்)

பத்திரிகையின் தலையங்கக் கட்டுரை "அக்டோபர் 19 மறுபடியும் நிகழுமா? என்ற கேள்வியுடன் முடிவடைகிறது. அத்துடன் அதற்குப் பதலளிக்கும்முகமாக" சர்வதேச பொருளாதார நிர்வாகத்தைத் துண்டாடி மீண்டும் பிளவுபடுத்தினால், குறிப்பாக அமெரிக்காவிலும் மற்றெங்கிலும் பாதுகாப்பு வாதம் வெற்றிபெறத் தொடங்கினால் அது மீண்டும் நிகழமுடியும், நிகழும் என்கிறது.

ஆனால் அது இந்நெருக்கடி சாதாரணமாக திரும்பத் திரும்ப தானாகவே நிகழ்கிறது என்பதுபற்றிய பிரச்சனையல்ல. சந்தைப் பொரிவு வெறுமனே ஒரே மாதிரியாக நிகழும் பொருளாதாரநெருக்கடியிலிருந்து எழுந்த விளைவல்ல ஆனால் அது தற்காலத்துக்கு ஒவ்வாதசமூகஅமைப்பு முறையின் வரலாற்று முரண்பாடுகளிலிருநதே தோன்றியுள்ளது. நெருக்கடிக்குப்பின் விளைவாக வால்ஸ்ட்ரீட் பத்திரிகையின் மதிப்பீடும், நெருக்கடிக்குத் தீர்வாக உண்மை என்று நம்பக்கூடிய எந்தவித தீர்வையும் முன்வைக்கமுடியாத அதனுடைய இயலாமையும், உலகடிராட்ஸ்கிச இயக்கமாகிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் செயயப்பட்ட பகுப்பாய்வை தெளிவாக ஊர்ஜிதம்செய்கிறது, ICFI அதன நவம்பர் 20, 1987—அறிக்கையில் 'உலகப் பொருளாதார நெருக்கடியும் சோசலிசத்திற்கான போராட்டமும்' என்பதில் விளக்குகிறது

"ஒரு நாட்டை அடுத்து மற்றொரு நாடாக ஏக காலத்தில் நிகழும் பங்குச் சந்தை பொரிவானது. முதலாளித்துவ நெருக்கடியின் உலக ரீதியான குணும்சத்தை எடுத்துக் காட்டுவதுடன், இந்நெருக்கடியை உண்டுபண்ணிய முதலாளித்துவ அமைப்பு முறையின் அடிப்படை முரண்பாடுகளை நோக்கி மார்க்சிஸ்டுகளின் கவனத்தை ஈர்க்கிறது.



அமெரிக்க வால் ஸ்ரீட் பங்கு மார்க்கெட், அக்டோபர் 19-ந் தேதி பொறிந்தபொழுது இடிந்துபோய் தலையில் கைவைத்து நிற்கும் காட்சி

சோசலிசப் புரட்சியானது பொருளாதார சூழ்நிலையின் ஒரேமாதிரியான மாற்றங்களில் இருந்து தோன்றும் ஒரு இலகுவான நிகழ்ச்சியல்ல. அது மிகப்பிரம்மாண்டமான வரலாற்று நெருக்கடியிலிருந்தே எழுகிறது; அவற்றை தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே தீர்க்க முடியும்.

"சர்வதேச அளவில் உற்பத்திசக்திகளின் மிகப்பெரிய வளர்ச்சியும் பிரம்மாண்டமான பல் தேசிய கம்பெனிகளின் ஒருங்கிணைந்த உலக உற்பத்தியும் ஏகாதிபத்தியசகாப்தத்தில் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளை மிகவும்கடுமையாக்கியுள்ளன அதாவது உலகச்சந்தைக்கும் உலகப் பகுதிகள் தேசிய அரசுகளாகப்பிரிந்திருப்பதற்கும் உள்ள முரண்பாடாகும்.

"முன்னர் நிகழ்ந்திராத அளவில் உறபத்தி சர்வதேசியமயப் படுத்தப்பட்டிருக்கும் நிலையில் உறபத்தி சக்திகள் மேலும் வளர்ச்சியடைய முதலாளித்துவம் பெரும் தடையாக இருப்பதுடன் விலை இறக்கம், வர்த்தக முரண்பாடுகள் மற்றும் போரின் மூலம் அவற்றை அழித்து விடும் அச்சுறுத்தலைக்கொண்டிருக்கிறது.

சர்வதேசத் தொழிலாள வர்க்கம உற்பத்தி சக்திகளை முதலாளித்துவ அமைப்பின் மரண படுக்கையினின்று விடுவிப்பதன் மூலம இம் முரண்பாடுகளைக் கட்டாயம் தீர்க்க வேண்டும். சோசலிசப் புரட்சியின் மூலமும அறிவு பூர்வமாக திட்டமிடப்பட்ட சோசலிசப் பொருளாதாரத்தின் மூலமும் அது கட்டாயமாக முதலாளித்துவ தேசிய அரசுகளை அழித்து, முதலாளித்துவத்தில் கீழ்ஏற்கனவே நிறுவப்பட்டிருநத முன்நிபந்தனைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த உலக உற்பத்தியை கட்டி அமைக்க வேண்டும

"இவ்வாறு உலகடிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு எல்லா வகையான திருத்தல் வாதங்களுக்கும் எதிராக பேணிய அடிப்படை மூலோபாயமான உலக சோசலிசப் புரட்சியானது, ஒரு பறநிலையான வரலாறறுத்தேவைகளிலிருந்து எழுகின்றது.

முதலாளித்துவவாதிகளின் பிரிவினர் இந்த வரலாற்று நெருக்கடியின் புரட்சிகர தாத்பரியங்களைப் பற்றி தங்களுக்குள் வெளிப்படையாகவே பேசத் தொடங்கிவிட்டார்கள். முதலாளித்துவத்திற்கான பல்கலைசழகமூலோபாய கல்விமான்களின் தேர்ந்தெடுக்கபபட்ட உறுப்பினரான ராபர்ட் கில்பின் ஒரு உதாரணமாவார் அண்மையில் வெளியிடப்பட்ட அவரது புத்தகமான "சர்வதேச உறவுகளின் அரசியல் பொருளாதாரத்தில்" அவர் கடும் எச்சரிக்கை விடுக்கிறார்

முதலாளித்துவ அல்லது சர்வதேச சந்தைமுறை நீடித்தகாலமநிலைத்திருப்பதானது. குறைந்த பட்சம் நாமறிந்த அளவு இரண்டாம் உலகப் போரின் முடிவிலிருந்து சர்ச்சைக்குரியதாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது...,.......... வியாபாரம், வெளிநாட்டு முதலீடு மற்றும் சர்வதேச நிதி விவகாரம பற்றியதில் சமகாலததிய முதலாளித்துவ சமூகங்களுக்கிடையே யான தொடர்ந்த மோதல்கள் லெனினுக்கும், காவுதஸ்கிக்கும் இடையில் நடைபெற்ற முதலாளிததுவத்தின் சர்வதேச தன்மை பற்றிய விவாதத்தை நினைவூட்டுகிறதுஇன்றும் பொருத்தமானதாக இருக்கிறது. 'சமமற்ற விதி' செயல்படுவதன் காரணமாக ஆமெரிசக அதிகாரமும் தலைமையும் சரிந்து வருகிறது; இது மோதலசளை அதிகரிக்சச் செய்வதுடன், லெனின் எதிர்பார்த்தபடி ஒரு நாட்டை அடுத்து இன்னொருநாடு 'அயலவனை ஆணடியாக்கும்' கொள்கையை பின்பற்றுவதால இந்த முதலாளித்துவ அமைப்பைசிர்குலைக்கின்றது. அல்லது முதலாளித்துவவாதிகள், பரஸ்பரநாசம் விளைவிக்கும் பொருளாதார அழிவு நடப்பதை அனுமதிக்கூடிய அளவு மிதவாதிகளாக இருக்கின்றார்கள் எனக் கூறும் காவுத்ஸ்கி சரியென்று நிரூபிக்கபபடுவாரா"

பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தின் டிவைட் டி. ஐசன் ஹோவர் பொருளாதாரப் பேராசிரியரான கில்ப்பின், லெனினது பெயரை இலேசாக உதவிக்கு அழைக்கவில்லை. அவர் அவரது முதலாளித்துவ வாசகர்களுக்கு, முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியானது, மீண்டும் ஒருமுறை உலகப் புரட்சிக்கான அச்சுறுத்தலைக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

கில்ப்பின் போன்ற முதலாளித்துவ தத்துவவாதகளின் அணுகு முறைக்கும் சோசலிசத்திற்கான முன்னேற்றங்களிலும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் திறனிலும் அவநமபிக்கையும் மனச்சோர்வும் கொண்டுள்ள மார்க்சிசத்தைக் கைவிட்ட அனைத்து ஓடுகாலிகளின் அணுகுமுறைக்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்கள் அனைவரும எதிர்ப்புரட்சிகர ஸ்டாலினிச அதிகாரத்துவத்தைச் சேர்ந்த கோர்பச்சேவின் பின்னால் வாலாக இழுபடுகின்றனர். அது (அதிகாரத்துவம்) இப்படியான எச்சரிக்கைகள் விடப்பட்டுக்கொண்டிருக்கையில, வெளிப்படையாகவே சோசலிசத்தைக் கைவிட்டு சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்சிக்கான கொள்கை ஒன்றைத் தொடர்ந்து பின்பற்றுகிறது.

"விவேகமான" முதலாளித்துவம் பரஸ்பரம் நாசமுண்டாக்கும் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கும் என்பதான தளர்ந்த நம்பிக்கையைக் கில்பின் கொண்டிருக்கிறார். எல்லாவகையானகுறிப்புக்களும் அடங்கிய அதன் சாரம, கடந்த வாரம் ஜப்பானிய உதவி நிதியமைச்சர் டோயூகியோ ஹ்டனின் பிரேரணையிலிருந்து கொண்டு வரப்பட்டது.

அதாவது "நுகர்வோர்: வியாபாரிகள், தொழிலாளர் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படை, நடத்தை ஒழுங்கு முறைகளை மாற்றி அமைப்பதுடன் ஒவ்வொரு பொருளாதார சமூகத்தையும் மாற்றி அமைப்பதன் மூலம்" உலகப் பொருளாதாரத்தை அடிப்படை ரீதியாகப் "புணரமைக்க வேண்டுவதாகும்".

★11ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க டிராட்ஸ்கிச ஓர்க்கர்ஸ் லீக்கின் ஜனதிபதி வேட்பாளர்களுக்கு 20,000 வாக்குகள்

அமெரிக்காவில் நடைபெற்ற நவம்பர் 8 ஜனதிபதி தேர்தலின் முடிவுகள், புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைத்து தொழிலாள வர்க்க மத்தியில் பிரச்சாரம் செய்த, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட அமெரிக்க டிராட்ஸ்கிச இயக்கமான ஓர்க்கர்ஸ் லீக்கிற்கு கிடைத்து வரும் தொழிலாள வர்க்க ஆதரவை எடுத்துக் காட்டுகிறது, அத்துடன் சோசலிஸ்டுகள் என தம்மை அழைத்துக் கொள்ளும் ஆனல் உண்மையில் ஜனநாயக கட்சியின் வட்டத்தினுள் வேலை செய்யும் குட்டி முதலாளித்துவ தீவிர வாத போக்குகளின் அதிகரித்து வரும் நெருக்கடியையும் வீழ்ச்சியையும் பிரதிபலிக்கிறது.

ஓர்க்கர்ஸ் லீக் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், இப்போது தெளிவாகி இருப்பது என்னவென்ருல், சோசலிஸ்டுகள் என தம்மைக் கூறிக் கொள்ளும் மற்ற எந்த ஒரு பிரிவினரையும் விட அதிகமான ஓட்டுகளை ஓர்க்கர்ஸ் லீக்கின் வேட்பாளர்களான, எட்வினும் (ஜனதிபதி வேட்பாளர்) பாரி போர்ஸ்டரும் (துணை ஜனதிபதி வேட்பாளர்) பெற்றுள்ளனர்.

ஓர்க்கர்ஸ் லீக்கின் வேட்பாளர்கள் ஓட்டுக்கான தகுதியை பெற்ற எட்டு மாநிலங்களிலும், கொலம்பியா மாவட்டத்திலுமாக சேர்த்து மொத்தமாக 19,467 ஓட்டுகளை பெற்றனர். மாநில வாரியாக பெற்ற ஓட்டு விபரம் பின் வருமாறு :

அலபாமா 460; இல்லினோயின் 7,095; ஐயோவா 223; மிச்சிகன் 1,966; மினேசோட்டா 489; நியூ ஜேர்ஸி 688; ஒஹாயோ 6,231; பென்சில்வேனியா 2,110; வாஷிங்டன் டி,சி. 205.

கெனாக்டிகட், நியூயார்க் ஆகிய இரு மாநிலங்களிலும் எட்வினும், பாரி போர்ஸ்டரும் உத்தியோக பூர்வமான எழுத்து மூலம் தெரிவிக்கும் வேட்பாளராக (write-in candidates) இருந்த போதிலும், எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட ஓட்டுகள் எண்ணப்படாமலே அழிக்கப்பட்டன. கெனாக்டிகட் மாநில அதிகாரிகள், ஓட்டுகள் அழிக்கப்பட்டதற்கான குற்றச்சாட்டை ''எழுத்தர் பிழை'' மீது போட்டனர். நியூயார்க் மாநிலத்தில், எழுத்து மூலம் தெரிவிக்கும் ஓட்டு பற்றிய விபரம் பல மாதங்களுக்கு அறிய முடியாதிருக்கும். தேர்தல் நாளன்று, நியூயார்க் நகரில் ஓர்க்கர்ஸ் லீக்கின் ஆதரவாளர்கள் எட்வினுக்கும் பாரி போர்ஸ்டருக்கும், தமது ஓட்டுக்களை எழுத்து மூலம் தெரிவிக்க முயற்சித்த போது அதிகாரிகளின் பெரும் எதிர்ப்பை எதிர் கொண்டதாகக் கூறினர்.

## குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள்

அசோசியேட்டட் பிரெஸ், மற்றும் ஏனைய அறிக்கைகளின்படி குட்டி முதலாளித்துவ தீவிரவாத பிரிவினருக்கு கிடைத்த மொத்த ஓட்டு, ஓர்க்கர்ஸ் லீக் வேட்பாளர்களுக்கு கிடைத்த ஓட்டுக்களை வெகு தூரத்துக்கு அப்பால் இருந்தது.

சோசலிச தொழிலாளர் கட்சி வேட்பாளர்களான ஜேம்ஸ் ... னுக்கும், காலின் மிக்கெலன்ட்டும் கிடைத்த ஓட்டுகள் (நியூயார்க் நகரம் இன்னும் எண்ணப்படாத நிலையில்) 14.042 ஆகும். சோசலிச தொழிலாளர் கட்சி வேட்பாளர்கள் 15 மாநிலங்களிலும் கொலம்பியா மாவட்டத்திலுமாக ஓர்க்கர்ஸ் லீக் ஓட்டுத் தகுதி பெற்ற மாநிலங்களிலும் பார்க்க ஓரளவு அதிகமான மக்கட்தொகை சுமார் 660 லட்சத்திலிருந்து 630 லட்சம் வரை—கொண்ட பிரதேச பகுதியல் ஓட்டுத் தகுதி பெற்றிருந்தன.



எட்வின்

சோசலிசத் தொழிலாளர் கட்சிக்கு கிடைத்த ஓட்டுகள் மாநிலவாரியாக பின்வருமாறு : அலபாமா 568; ஐயோவா 198; மிச்சிகன் 888, மின்னேசோட்டா, 2,155; நியூ ஜேர்ஸி 2,739; நியூ மெச்சிக்கோ 345; அப்ஸ்டேட் நியூயார்க், 1,723; நார்த் டேகோடா 347; ரோட் ஐலண்ட் 111; சவுத் டேகோடா, 223; டென்னஸீ 677; உடடா, 210; வெர்மான்ட் 113; வாஷிங்டன் டி.சி, 121; வாஷிங்டன் மாநிலம், 1,175; விஸ்கான்சின், 2,449

நியூயார்க் நகர ஓட்டு, இன்னும் எண்ணப்படாத நிலையில், சாம் மார்க்சி தலைமையிலான தொழிலாளர்கள் உலகக் கட்சி (WWP) வேட்பாளர்களான லாரி ஹோமஸ், நவோமி கோயேனிற்கு கிடைத்த ஓட்டுகள் 6,628 ஆகும் தொழிலாளர்கள் உலகக்கட்சி ஓட்டுத் தகுதி பெற்ற ஐந்து மாநிலங்கள் : மிச்சிகன், நியூ ஜேர்ஸி, நியூ மெச்சிக்கோ, நியூயார்க், வாஷிங்டன்.

அமெரிக்காவில் மரினோவாதிகளின் இயக்கமான சர்வதேசிய தொழிலாளர்கள் கட்சியின் (IWP) வேட்பாளரான ஹேர்ப்லூவின் 8,769 ஓட்டுகளைப் பெற்ருர். அவர் ஓட்டுத் தகுதியை மூன்று மாநிலங்களில் (நியூ ஜேர்ஸி, ரோட் ஐலண்ட், வெர்மண்ட்) மட்டுமே பெற்ருர். லூவின் பெயரளவிலும் கூட ஒரு சோசலிஸ்டு என்று அழைத்துக் கொள்ளாமல், சமாதான மற்றும் சுதந்திரக் கட்சி என்ற லேபிளின் கீழ் தேர்தலில் பங்கு கொண்டார். 1984 தேர்தல் ஓட்டுடன் இவ்வருட தேர்தல் முடிவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பின் குட்டி முதலாளித்துவ பிரிவினரின் வீழ்ச்சியைக் கண்டு கொள்ள முடியும்.

1984ல் கம்யூனிஸ்ட் கட்சி அதன் சொந்த ஜனதிபதி வேட்பாளரை நிறுத்தி, அப்போதும் கூட மொன்டேலுக்கு வாக்களிக்கும்படி தொழிலாளர்களை ஊக்குவித்து. 35,561 ஓட்டுகளைப் பெற்றது. சோசலிசத் தொழிலாளர் கட்சி 24,687 ஓட்டுகளையும். தொழிலாளர்கள் உலகக்கட்சி 17,938 ஓட்டுக்களையும் பெற்றன.

சோசலிஸ்டுகள் என தம்மைக் கூறிக்கொள்ளும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதப் பிரிவினர் அனைவரினதும் மொத்த ஓட்டுகளின் எண்ணிக்கை 78,186, அதே சமயம் முதன் முறையாக எட்வினை ஜனதிபதி வேட்பாளராகக் கொண்டு தேசிய அளவில, 1984ல் ஓர்க்கர்ஸ் லீக்கின் பாட்டாளி வர்க்க சோசலிசப் பிரச்சாரத்திற்கு 14,363 ஓட்டுகள் கிடைத்தன.



பாரி போர்ஸ்டர்

1988ல், ஜனநாயக கட்சிக்காக பிரச்சாரம் செய்வதை வலுப்படுத்துவதற்காக கம்யூனிஸ்ட கட்சி தனது சொந்த வேட்பாளரை நிறுத்தாது விட்டது; சோசலிச தொழிலாளர் கட்சி, தொழிலாளர்கள் உலகக் கட்சிக்கு கிடைத்த ஓட்டுகள் வீழ்ச்சி கண்ட நிலையில் குட்டி முதலாளித்துவ தீவிர பிரிவினருக்கு கிடைத்த மொத்த ஓட்டுகள் 78,186 இலிருந்து 20,670 ஆக. அல்லது லூவினையும் (மரினோவாதிகளின் வேட்பாளர்) சேர்த்தால் 29,449 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதேவேளை, ஓர்க்கர்ஸ் லீக் வேட்பாளர் எட்வினுக்கு 1984ல் 14.363. 1988ல் 19.467 ஆக அதிகரித்துள்ளது; மொத்த வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை ஓட்டு மொத்தமாக வீழ்ச்சி அடைந்தபோதும் கூட. ஓர்க்கர்ஸ் லீக்கிற்கு கிடைத்த ஓட்டுகள் 40% ஆக உயர்ந்துள்ளது.

இந்த உயர்வான எண்ணிக்கை ஒரு சமூக மற்றும் வர்க்க முக்கியத்துவமுடையவையாகும். அவை. அமெரிக்க அரசியலில் ஏற்படும் துருவ முனைப்படுத்தலை எடுத்துக் காட்டுகிறது; இதனை முதலாளித்துவ செய்தி சாதனங்கள் மூடி மறைத்து. அதிக கவனத்தை இரு முதலாளித்துவ கட்சிகளின் மற்றும் அவற்றின் பிற்போக்கு வேலைத் திட்டங்களிலும், கோடீஸ்வர வேட்பாளர்களை விளம்பரம் செய்வதிலும் செலுத்துகின்றனர்.

சோசலிச தொழிலாளர் கட்சி, மார்ச் நடுப்பகுதி வரையில் அதன் ஜனதிபதி வேட்பாளர் பிரச்சாரத்தை அறிவிப்பதை தாமதப்படுத்தியது. தொழிலாளர்கள் உலகக் கட்சி (W. W. P.), ஜனநாயகக் கட்சி நியமனத்தில் (கட்சிக்குள்) ஜக்சன் வெற்றி பெற்ருல். அதன் வேட்பாளர்களை வாபஸ் வாங்கி ஜக்சனிற்கு ஆதரவளிக்கும் என அறிவித்தது.

மிகவும் வர்க்க-நனவுடைய தொழிலாள வர்க்க பிரிவுகள் இடது பக்கம் நோக்கி செல்கின்றனர், அது ஓர்க்கர்ஸ் லீக்கிற்கு கிடைத்த அதிகப்படியான ஓட்டுகளில் பிரதிபலித்தது. ஆனல் முதலாளித்துவ வர்க்கம் கடந்த சகாப்தத்திலும் மிக மோசமான வலதுசாரி மார்க்கத்தில் சென்று வேலைகளின் மீதும், வாழ்க்கைத் தரங்களின் மீதும் தொழிற்சங்கங்களின் மீதும் குரூரமான தாக்குதலை நடத்துவதற்கு சாதகமாகவிருந்த வாதம், மிதவாதம், வர்க்க சமரசம் போன்றவற்றின் ஒவ்வொரு துளிகளையும் அழிக்கிறது. முதலாளித்துவத்துடன் சேர்த்து இழுக்கப்பட்டு வந்தது, குட்டி முதலாளித்துவ எதிர்ப்பு அரசியலின் தோற்றமாகும்.

## ஜெஸீ ஜக்சனின் ஏமாற்று

அமெரிக்க பொதுத் தேர்தலில் வாக்களிக்க 940 லட்சம் மக்கள் மறுத்தனர் இந் நிகழ்ச்சி லட்சக் கணக்கான தொழிலாளர்கள் இரு கட்சி அமைப்பு முறையிலிருந்து தொடர்ச்சியாக விலகி வருகின்றனர் என்பது பற்றி அமெரிக்க முதலாளித்துவம் சிந்திக்க ஆரம்பித்ததன் விளைவு, கூச்சலகாரன் ஜெஸி ஜக்சனை ''மக்கள் வேட்பாளர்'' என அழைத்து ஜனநாயக கட்சி மீதும், பழுமையாக முதலாளித்துவ அரசியலின் ஒரு மீதும் பிரமையை உண்டு பண்ண முன்னணிக்கு கொண்டு வந்தது.

ஆனல் இவற்றிற்கு நேர்மாருக, தேர்தல பிரச்சாரத்தின் முதல் நாளிலிருந்தே, ஜெஸி ஜக்சனின் மீதான பிரமைகளுக்கு எதிராக ஓர்க்கர்ஸ் லீக் ஒரு கடுமையான போராட்டத்தை நடத்தியது. ஓர்க்கர்ஸ் லீக், ஜக்சனை ஒரு முதலாளித்துவ அரசியல் வாதி எனவும், ஒரு வெறிப் பேச்சாளன் எனவும், தொழிலாள வர்க்கத்தின் எதிரி எனவும், ஜனநாயக கட்சியுடன் முறித்துக் கொண்டு ஒரு தொழிற் கட்சியை அமைப்பதற்கான எந்த ஒரு சுதந்திரமான தொழிலாள வர்க்க இயக்கத்துக்கும், ஒரு தெருத்தடையாக திட்டமிட்டே முதலாளித்துவ வர்க்கத்தால் உருவாக்கப்பட்டவர் எனவும் எச்சரித்தது.

நவம்பர் 8, தேர்தலில் இப்போராட்டத்தின் ஒரு விளைபயன் தெளிவாகியது. ஜனநாயக கட்சியிலிருந்து சுதந்திரத்தை ஒரு வெளித் தோற்றத்திற்கென்ருலும் கூட, இந்த போலி சோசலிச நடுத்தர வர்க்க தீவிரவாத போக்குகளினல் பேண முடியவில்லை. அதன் பிரகாரம் அவர்களுக்கு கிடைத்த ஓட்டும் வீழ்ச்சி கண்டது. அதேவேளை ஓர்க்கர்ஸ் லீக்கின் பாட்டாளி வர்க்க புரட்சிகர போக்கிற்கு கிடைத்த ஓட்டுகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்தது.

## சந்தர்ப்ப வாதத்திற்கு எதிரான போராட்டம்

ஓர்க்கர்ஸ் லீக்கின் தேர்தல் பிரச்சாரத்தின் முக்கியமான, இறுதியான அம்சம் ஒன்று இருக்கிறது இந்தப் பிரச்சாரம் 1985-86-இல் பிரிட்டனின் தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் (W. R P.) நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு பிளவுற்றபோது, அனைத்துலக குழுவினுன் சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக நடத்திய சக்தி வாய்ந்த போராட்டத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

இந்த தேர்தல் பிரச்சாரம், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அனைத்துப் பிரிவுகளின் தேசியவாத சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக மார்க்சிச கோட்பாடுகளுக் காகவும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்காகவுமான போராட்டத்தினல் முடுக்கிவிடப்பட்ட பிரமாண்டமான பலத்தை நிரூபிப்பதாக இருந்தது.

இந்தப் போராட்டமே, ஓர்க்கர்ஸ் லீக் மூன்று அடிப்படை கோட்பாடுகளை (1) முதலாளித்துவத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியம்; (2) ஒருதொழிலாளர் அரசாங்கத்திற்கு போராடுவதற்காக ஒரு தொழிற் கட்சியைக் கட்டல்; (3) முதலாளிகளுக்கு நஷ்ட ஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் வங்கிகளையும், அடிப்படை தொழிற்துறைகளையும் தேசியமயமாக்கல் உள்ளடங்கலாக ஒரு முழுமையான சோசலிச வேலைத் திட்டத்தை அமுல்படுத்தல் ஆகியவற்றை, அடிப்படையாகக் கொண்டு அதன் தேர்தல் மேடையை விரிவாக்க உதவியது. ஓர்க்கர்ஸ் லீக்கின் தேர்தல் அறிக்கையை விளக்கும் பிரசுரங்கள் ஏப்ரலில் அது வெளியிடப்பட்டதில் இருந்து 20,000க்கும் அதிகமான பிரதிகள் விற்பனையானதுடன் தொழிலாள வர்க்க மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றது.

தேர்தல் அறிக்கையில் விளக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்க, ஓர்க்கர்ஸ்லீக் தேர்தலின் பின்னும் தொடர்ச்சியாக போராடும்; புஷ்ஷின் நிர்வாகத்துடனும், ஜனநாயக காங்கிரசுடனும் தொழிலாளர்கள் அமெரிக்கா முழுவதும் தொடர்ச்சியான மோதலுக்கு வருகையில், ஓர்க்கர்ஸ் லீக்கின் புரட்சிகர சோசலிச வேலைத் திட்டம் தொழிலாளர்களின் அதிக ஆதரவை பெறும் என்பதில் டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு நம்பிக்கை உண்டு

★11ம் பக்கம் பார்க்க


## தொழிலாளர் பாதை புதிய சந்தா விபரம

| | நேரடி | தபால் |
|---|---|---|
| ஆறுமாத சந்தா (6 இதழ்கள்) | ரூ. 5-00 | ரூ. 6-50 |
| ஒருவருட சந்தா (12இதழ்கள்) | ரூ. 10-00 | ரூ. 12-50 |

பெயர் : ..............................

முகவரி : ..............................

நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி: தபாற்பெட்டி எண் 968, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-600 012.


படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னோக்குகளின் தீர்மானம்!


1. 1938-செப்டம்பரில் நான்காம் அகிலம் நிறுவப்பட்டு ஒரு அரை நூற்றாண்டின் பின்னர் உலகப் பாட்டாளிகளினுள்ளே புரட்சிகர தலைமை நெருக்கடியைத் தீர்த்துவைக்க அதனால் நடத்தப்பட்ட ஈவிரக்கமற்ற போராட்டத்தினை வரலாறு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கிறது. அனைத்துலகக் குழுவினால் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலத்துக்கு வெளியே, தொழிலாள வர்க்கத்தினை உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக புரட்சிகரப் போராட்டத்திற்கு அணிதிரட்டி, கல்வி புகட்டும அரசியல் கட்சி எதுவுமே கிடையாது. அனைத்துலக ரீதியில் தொழிலாளர் இயக்கம உக்கிரமான நெருக்கடிக் காலப்பகுதியினூடாகச் சென்று கொண்டிருக்கிறது. இது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மையாகும். இன்றிருக்கும் பரந்த தொழிலாளர் கட்சிகளாலும், தொழிற்சங்க இயக்கங்களின் தலைமைகளாலும் தொழிலாள வர்க்கத்திற்கு காட்டிக் கொடுப்புகள், தோல்விகள், மன முறிவுகளைத் தவிர வேறெதனையும் வழங்க முடியாதிருக்கிறது. ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், அமெரிக்க ஏ. எப் எல்.—சி ஐ ஓ. (AFL–CIO)க்களின் பழைய அதிகாரத்துவ இயந்திரங்கள் இதுகாறும் தொழிலாளர் இயக்கத்தினுள் முதலாளித்துவ வர்க்கத்தின் போலீஸ் படையாக விசுவாசமான முறையில் சேவை செய்து வந்திருக்கின்றன. இவை கோடிக்கணக்கான தொழிலாளர்களின் கண்ணெதிரே முழுமையாக மதிப்பிழந்து கொண்டிருக்கின்றன. ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட தொழிலாளர் இயக்கம் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் இதே கதைதான்: வெட்கமற்ற விதத்தில் அதிகாரத்துவங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் சகாக்களாக செயல்படுகின்றன, தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை சீர்குலைக்கவும், முதலாளித்துவ நெருக்கடியின் முழுச்சுமையையும் அதன் முதுகின் மீது சுமத்தவும் தம்மால் ஆனதை எல்லாம் செய்து வருகின்றன.

2. அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் அதனதுபாரம்பரிய தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குத் தாக்குதலுக் கெதிராக மிகவும் அத்தியாவசியமான நலன்களைத் தன்னும் பேண இவர்கள் மறுக்கின்றார்கள். மாறாக இந்த திவாலான தலைமைகள், பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தின் ஒரு தனித்துவமான வர்க்கமாக இருக்கின்றதென்பதையும், அது முதலாளித்துவ சரணடலுக்கு எதிராக அதனது சுயாதீனமான நலன்களைப் பேணியாக வேண்டும் என்ற அடிப்படையான கருத்துருக்களையும் கூட காலத்திற்கு ஒவ்வாதது என நிராகரிக்கின்றார்கள். முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவகம் செய்யும் அவர்களின் திடசங்கற்பத்தில் அவர்கள் கடந்து செல்லத் தயார் இல்லாத கோடெதுவும் கிடையாது.

3. இந்த ''கைவிடுதல் வாத'' தோற்றப்பாடு கிரெம்ளின் அதிகாரத்துவம் மற்றும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள் முதல் தொழிற்சங்கஅதிகாரிகள் வரையில் தொழிலாளர் இயக்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலும்பிரதிபலிக்கின்றது. கோர்பச்சேவின் தலைமையின்கீழ்ஸ்டாலினிச அதிகாரத்துவம் இன்று அக்டோபர் புரட்சியின்தேட்டங்களின் பேரிலான தமது வாயளவிலான விசுவாசத்தைக்கூட புறக்கணித்துவிட்டு முதலாளித்துவத்தின் மேன்மையை ஒப்புக்கொள்கின்றது. கோர்பச்சேவின் சைகையை ஏற்றுக் கொண்டு உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகள்,தேசிய முதலாளித்துவ அரசியலினுள் தமது இணைப்பினைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பினைப் பயன்படுத்துகின்றன. சமூக ஜனநாயக அமைப்புக்களைப் பொறுத்தமட்டில், சீர்திருத்தங்களை வழங்க முடியாத முதலாளித்துவத்தின் இயலாமையை, அவை தமது பழைய 'குறைந்தபட்ச' வேலைத்திட்டங்களை நிராகரிப்பதன் மூலம் பிரதிபலிக்கின்றன. சோசலிசப் புரட்சியை 'யதார்த்தமற்றது' என ஒதுக்கித்தள்ளுவதன் மூலம் முதலாளித்துவத்துக்கு தமது அடிபணிதலை கடந்த காலத்தில் நியாயப்படுத்தி வந்த மார்க்சிசத்தின் திருத்தல்வாத எதிர்ப்பாளர்கள்,இன்று 'யதார்த்தத்தின்' பேரால் சம்பள வெட்டுக்கள், பரந்த வேலை நீக்கங்கள், அத்தியாவசிய சமூக சேவைகள் ஒழிப்பு ஆகியவற்றை ஏற்கின்றார்கள். அதே பாணியைப்பின்தொடர்ந்து தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிற்சாலைகளில் எஜமானர்களின் போலீஸ்காரர்களாக அப்பட்டமாகவே தொழிற்படுகின்றனர். முதலாளித்துவ சரணடலின் உக்கிரத்தைத் தணிக்க முயலும் தொழிலாள வர்க்க பாதுகாப்பு இயக்கங்களாக இருப்பதிலும் பார்க்க, தொழிற்சங்கங்கள் அந்த சரண்டல் நுட்பங்களை சரியாகச் செய்யும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் நேரடியாக இணைந்து மேலும் மேலும் வெளிப்படையாகவே இயங்குகின்றன.

4. நான்காம் அகிலம் அதன் வரலாறினதும் வேலைத்திட்டத்தினதும் சீரியபண்பு காரணமாக இந்த அழுகி நாற்றமெடுத்த அதிகாரத்துவ ஒட்டுண்ணிகளின் காட்டிக் கொடுப்புகளுக்கான ஒரே புரட்சிகரப்பதிலீடாக இருக்கிறது. சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலம் முழுவதும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவதில்தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் முதலாளித்துவ அமைப்பின் தற்போதைய உலக நெருக்கடியினதும் தொழிலாள வர்க்கத்தின் மீதான அதன் தாக்கத்தினதும் உள்ளடக்கத்தில், புரட்சிகர தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான டிராட்ஸ்கியின்போராட்டத்தின் ஆழமான வரலாற்றுப் பரிமாணத்தின் மதிப்பை இப்பொழுதுதான் முழுமையாகச் சரியாய் உணர முடிகிறது.

5. டிராட்ஸ்கி நான்காம் அகிலத்தை அமைக்க முதல் அழைப்பைவிட்டிருந்தபொழுது மகத்தான இரு அகிலங்கள்இருபது வருடங்களுக்குள்ளேயே வீழ்ச்சியுற்றிருந்தன — இரண்டாம் அகிலம் 1914லும்-மூன்றும் அகிலம் 1933லும்—இது 1847-ல் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதிய காலம் முதல் போல்ஷேவிக்குகள் 1917-ல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் வரை வளர்க்கப்பட்ட அரசியல் கலாச்சாரத்தைத் தகர்க்கும் அளவிற்கு தாக்குதலைத் தொடுத்தது. முதலாவதாக சமூக ஜனநாயகமும் அதற்குப்பின் ஸ்டாலினிசமும் உலக ஏகாதிபத்தியத்தின் சேவையில சேர்ந்தன. இவற்றின் காட்டிக் கொடுப்புக்கள் தொழிலாள வர்க்கத்திற்கு மிகப் பிரம்மாண்டமான தோல்விகளைக் கொடுப்பதற்குப் பொறுப்பாய் இருந்தன, ஏகாதிபத்தியத்தின் இந்த இரு ஏஜெண்சிகளினுள்ளும் ஸ்டாலினிசத்தின் பங்கு அளவிட முடியாத அளவு துரோகமானது. சமூக ஜனநாயகம் வெளிப்படையாகவே சோசலிசப் புரட்சியின் வேலைத் திட்டத்தை நிராகரித்த பொழுது, சோவியத் அரசின் பிரம்மாண்டமான வளங்களை சடரீதியாக அடிப்படையாகக் கொண்ட அதன் சர்வதேச நடவடிக்கைகள் மூலம் ஸ்டாலினிசமானது, 1917-ன்பதாகையை சிடுமூஞ்சித்தனமாகச் சுரண்டியவாறு அதிகோர இரத்தம்தோய்ந்த எதிர்ப்புரட்சிக் குற்றங்களைச்செய்தது.



லியான் டிராட்ஸ்கி

இது அக்டோபர் புரட்சியின் வரலாற்றை நெறிமுறை ரீதியாகப் பொய்மைப்படுத்தி மாபெரும் போல்ஷேவிக்குகளின் பெயர்களை அவதூறுகளின் மூலம் மூடி மறைத்தது, லெனினின் கட்சியை அழித்தது, எண்ணற்ற ஆயிரக்கணக்கான மார்க்சிஸ்டுகளைப் படுகொலை செய்ய ஏற்பாடு செய்தது.

6. கற்பனை செய்யவே முடியாத கஷ்டங்களின் எதிரிலும் டிராட்ஸ்கி மார்க்சிசத்தின் வரலாற்று மரபுகளை ஊர்ஜிதம செய்ததோடு 'தனி நாட்டில் சோசலிசம' என்ற பிற்போக்கு தேசியவாத வேலைத் திட்டத்திற்கு எதிராக உலக சோசலிசப் புரட்சி முன்னோக்கினையும் பேணினார். அவர் போல்ஷேவிக் கட்சி மீதான ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வெற்றி சோவியத் குடியரசில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் முதலாவது கட்டத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக விஞ்ஞான ரீதயில் எடுத்துக் காட்டினார். ஆதலால் முதலாவது தொழிலாளா அரசினையும் 1917 அக்டோபர் புரட்சியின் தேட்டங்களையும் காக்கும் பொருட்டு ஒரு வரலாற்றுத் தேவையாக, அதிகாரத்துவத்தை ஒரு அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீசுவது அவசியமானது என்றார். இம் முன்னோக்கினை முன்வைக்கையில், டிராட்ஸ்கி கிரெம்ளினில் ஜி.பி.யு. மாஃபியாவை மட்டும அல்லாமல், தோல்விகளதும் தனிமைப்படுத்தல்களினதும் காலப்பகுதயில் ஒரு அனைத்துலகக் கட்சியை நிறுவ முடியாது எனக் கூறிக்கொண்ட எண்ணற்ற மத்தியவாத போக்குகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. டிராட்ஸ்கி தமது பதிலில் மார்க்சிய அரசியல் எது சாத்தியமானது அல்லது எது சாத்தியமற்றது என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லையெனவும்,மாறாக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணிகளை விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்வதைத்தான் அடிப்படையாகக் கொணடது எனவும் வலியுறுத்தினார். மேலும் அவர் நாளைய புரட்சிகளின் நீரோட்டத்திற்கு எதிராக இன்று நீச்சல அடிப்பவர்களால மட்டுமே அது தயார் செய்யப்பட முடியும் எனவும் பிரகடனம் செய்தார்.

7. இந்தமுன்னாய்வு முழுமையாக ஊர்ஜிதமாகிஇருக்கிறது. சோவியத் அதிகாரத்துவம சர்வதேச சோசலசம் தொடர்பான அக்கறையை அழுத்தமாக நிராகரிக்கிறது. உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அனைத்து போராட்டங்களையும எவ்வளவுதான் அது வரம்புக்குட்டடுத்தப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து தன்னைபகட்டான முறையில வேறுபடுத்தி, அக்டோபர் புரடசியின் பெரும வெற்றிகளை அழிப்பதில் அதிகாரத்துவம் வெளிப்படையாகவே ஆரமபிககிறது. மற்றும சோவியத் யூனியனுள் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியை ஊககப்படுததுகிறது. சோவியத்யூனியன் ஒரு தொழிலாளர் அரசாக உயிர் வாழ்வதெனபது நான்காம் அகிலத்தைக் கட்டி அமைப்பதிலேயே தங்கியுள்ளது. அக்டோபர்ப் புரட்சி வேலைத்திட்டத்தையும் மரபுகளையும் டிராட்ஸ்கிசம் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கிறது எனும் உண்மை ஒரு முக்கியமான விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகும். சோவியத் சமூகத்துக்குள் தொழிலாள வர்க்கத்திற்கும் ஒட்டுண்ணி அதிகாரத்துவத்திற்கும இடையிலான முனைப்படுத்தல் என்றுமில்லாத செறிவான மட்டத்தை அடைநதுள்ளது. ஒரு புரடசிகர நிலைமையின் அனைத்து அத்தியாவசிய முன் தேவைகளும்—அனைத்து சமூகத் தட்டுக்களையும பாதிககும் ஒரு தேசிய ரீதயான நெருக்கடியை—பழைய முறைகளில் ஆட்சிசெய்ய ஆளும் வட்டங்களால் முடியாதிருத்தல், இருந்து வரும நிலைமைகளை ஏற்றுக்கொளள ஆட்சி செய்யப்படுபவர்கள் சகிக்கமுடியாத நிலையில இருத்தல் இவை சோவியத் யூனியனுக்குள் மிக வேகமாக வளர்ச்சி அடைகின்றன. இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சியில் அதாவது சோவியத் பொருளாதாரத்தை உலக முதலாளித்துவத்துடன் ஒன்றிணைப்பதன் மூலமாகவும் சோவியத யூனியனுக்குள்ளேயே முதலாளித்துவ உறவுகளை நீடிக்கச் செய்வதன் மூலமும் கோர்பச்சேவின் கொள்கைகள் நேரடியாகவே, போல்ஷேவிக் புரட்சியின் பிரதான வெற்றிகளான தேசியமயமாக்கப்பட்ட சொததுறவுகளை மற்றும் அரச திட்டமிடல்கொள்கைகளை அச்சுறுத்துகின்றன கோர்பச்செவின் பெரஸ்துரோய்கா வேலைத்திட்டத்தின் தாககம், திட்டமிட்ட பொருளாதாரத்தின அடித்தளங்களைப் பேணுவதற்காக சோவியத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகர இயக்கத்தின் தோற்றத்திற்கு வழிவகுக்கும்.

8. அழிந்து கொண்டிருக்கும் ஆட்சியின மரண வேதனையின் முதல் வெளிப்பாடு ஆளும அதிகாரத்தட்டுக்களுக்கிடையிலான குரூரமான மோதல்கள் வெடித்தெழுவதில் வெளிப்படுத்தப்படுவது, சாதாரண வழக்காகும், சோவியத் யூனியனுக்குள் இந்த வரலாற்றுப்போக்கு உணரப்பட்டுள்ளது. எனவே இறுதியில வரலாறு ஸ்டாலினிசத்தையும் அதன் குற்றங்களையும் எட்டிப்பிடித்துள்ளது. மாஸ்கோ வழக்குகளை காலதாமதமாக நிராகரித்ததும், அதன் பலி ஆட்களை புனர் நிர்மாணம் செய்ததும், ஸ்டாலினால் கொலை செய்யப்பட்ட போல்ஷேவிக் தலைவர்கள் சோவியத் யூனியனுக்கு எதிராக எந்தவொரு குற்றத்தையும் செய்யாதவர்கள் என்பதை ஒப்புக் கொள்ளலும், கோர்பச்சேவின் எண்ணங்களும் சூழ்ச்சிகளும் எதுவாக இருப்பினும் அவற்றிலிருந்து ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எந்த ஒரு குழுவும் மீளமுடியாத தாககத்தை ஏற்படுத்தியுள்ளது. டிராட்ஸ்கிசத

★6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் முன்நோக்குகள்

துக்கு அதாவது உண்மையான மார்க்சிசத்துக்கு எதிரான அதிகாரத்துவத்தின் போரின் பிரதான ஆயுதமாக அமைந்த குரூரமான பொய்ப்புனைவுகள் அம்பலப்படுத்தப்பட்டு மதிப்பிழந்துள்ளன. சோவியத் யூனியனுக்குள் வெடித்தெழுந்துள்ள அரசியல் நெருக்கடி ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு சாவுமணியை அடித்தது மட்டுமல்லாமல், அது நான்காம் அகிலத்தின் சகாப்தத்துக்கான ஓர் அறிகுறியாகும். அதாவது, நான்காம் அகிலம் சோவியத் மற்றும் சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் பரந்த கட்சியாக மாறும் சகாப்தம் வந்துள்ளது.

## சர்வதேசியமும் பாட்டாளி வர்க்கமும்

9. நான்காம் அகிலத்தின் சகாப்தம் அர்த்தப்படுத்துவது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையில் புரட்சிகர சர்வதேசியத்தின் மறுஉயிர்ப்பாகும். உண்மையில் ஸ்டாலினிசத்தின் மற்றும் சீர்திருத்தவாத அதிகாரத்துவத்தின் நெருக்கடி, அரசியல் பொருளாதார தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களின் திவால் நிலையை எடுத்துக்காட்டுகிறது. அது ஏதோ ஒரு வகத்தில் தொழிலாள வர்க்கத்தை ஒவ்வொரு நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கும் மற்றும் உலக ஏகாதிபத்தியத்துக்குமாக முழுமையாக முடிச்சுப் போடுகின்றது. 1914-ல் முதலாவது உலகப்போர் வெடித்ததிலிருந்து மார்க்சிஸ்டுகளின் போராட்டம்—முதலாவதாக சமூக ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும் அதன்பின் ஸ்டாலினிஸ்டுகளுக்கெதிராகவும்—சர்வதேச பதாகையின்கீழ்ழயே தொடர்ந்தது. திட்டவட்டமாக அறுபது ஆண்டுகளுக்கு முன் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆளுமைக்குள் அடியோடுவிழுந்துவிட்ட அகிலத்தின் வரைவு வேலைத்திட்டம் பற்றிய அவரது விமர்சனத்தில் டிராட்ஸ்கி பின்வருமாறு எழுதினர்:


10. ''எமதுசகாப்தத்தில்-இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில்-அதாவது உலகப் பொருளாதாரமும் உலக அரசியலும் நிதிமூலதனத்தின் மேலாதிக்கத்தின் கீழ் உள்ள நிலையில், எந்த ஒரு கமயூனிஸ்ட் கட்சியும் முழுமையாயும் பிரதானமாகவும் தனது சொந்த நாட்டினுள் உள்ள நிலைமைகளின், போக்குகளின் வளர்ச்சிகளில் இருந்து ஆரம்பிப்பதன் மூலம் தனது வேலைத்திட்டத்தை ஸ்தாபிக்க முடியாது.......1914 - ஆகஸ்ட் 4ஆம் தேதி அனைத்துக் காலங்களுக்குமாக தேசிய வேலைத்திட்டங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி தற்போதைய சகாப்தத்திற்கு, முதலாளித்துவத்தின் உயர்ந்த வளர்ச்சியும் வீழ்ச்சியும் கொண்ட சகாப்தத்தின் தன்மையுடன் தொடர்புடையதான ஒரு சர்வதேசிய வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே இருக்க முடியும். ஒரு சர்வதேசிய வேலைத்திட்டம் என்பது ஒரு பொழுதும் தேசிய வேலைத்திட்டங்களின் ஒட்டுமொத்தமோ அல்லது அவற்றின் பொதுத் தோற்றங்களின் ஒருங்கிணைப்போ அல்ல. சர்வதேச வேலைத்திட்டம், உலகப் பொருளாதார உலக அரசியல் அமைப்பை முழுமையாகக் கொண்டதாகவும் நிலைமைகளின் போக்குகளின் அவற்றின் அனைத்துத் தொடர்புகளையும் முரண்பாடுகளையும் அதாவது அதன் தனிப் பகுதிகள் பரஸ்பர ரீதியாகப் பகைமையுடன் ஒன்றிலொன்று தங்கியுள்ள நிலைமைகள் பற்றிய ஆய்விலிருந்தே நேரடியாக ஆரம்பிக்க வேண்டும். தற்போதைய சகாப்தத்தில் கடந்த காலத்தைவிட மிக அதிக அளவில் பாட்டாளி வர்க்கத்தின் தேசிய அணுகுமுறை ஒரு உலக அணுகுமுறையிலிருந்தே ஊற்றெடுக்க வேண்டும்; ஊற்றெடுக்க முடியும், எதிர்மாறாக அல்ல. இங்கே தான் கம்யூனிச சர்வதேசியத்திற்கும் தேசிய சோசலிசத்தின் அனைத்து வகைகளுக்கும் இடையிலான அடிப்படையான பிரதானமான வேறுபாடு இருக்கிறது.''

11. முதலாளித்துவ லாப அமைப்புக்கு ஒரு முடிவு கட்ட நடத்தும் போராட்டத்தின் மூலோபாய அச்சாக இருப்பது, உலக சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட்டுவதாகும். இந்தப் போராட்டத்தின் வேலைத்திட்ட அடித்தளம் டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தினின்று வந்ததாகும்—அது உலக சோசலிசப் புரட்சி பற்றிய முழுமையான பரந்த சாலமான தத்துவமாகும். அது வளர்ச்சியடைந்த பின்தங்கிய நாடுகளின் அதேபோல சோவியத் யூனியனின் மற்றும உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளின் (சீனு, வியட்னும, கிழக்கு ஐரோப்பா....) பாட்டாளிகளின் நடவடிக்கையை உள்ளடக்கியதாகும. அனைத்துலகக் குழுவின முன்னோக்கை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியம் ஒரு விஞ்ஞான ரீதியாக முதலாளித்துவ உற்பத்தி முறையின் சர்வதேசத்தன்மை பற்றியும,முதலாளித்துவ நெருக்கடியின் உலகப் பரிமாணங்கள் பற்றியும் அனைத்துக்கும் மேலாகப் பாட்டாளி வர்க்கம ஒரு சர்வதேசவர்க்கம என்னும் தன்மை பற்றி சரியாக உணர்ந்து கொள்வதிலாகும்.

12. புறநிலை ரீதியாக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியமானது, மிகவும் ஆழ்ந்த முக்கியமான பொருளாதார செயற்பாடுகளால் பலப்படுத்தப்பட்டு வருகிறது. நாடு கடந்த கூட்டுக் கம்பெனிகளின் பிரம்மாண்டமான வளர்ச்சியும் அதனால் ஏற்படும முதலாளித்துவ உற்பத்தியின் பூகோள ரீதியான ஒருமுகப்படுத்தலும் முன் ஒருபோதும இல்லாத அளவில் உலகத தொழிலாளர்களை எதிர்கொள்ளும்நிலைமைகளுள் ஒரே தன்மையை உண்டுபண்ணியுள்ளது. முதலாளிகளின் தேசியகுழுக்களுக்கிடையில் உலகச்சந்தையின் ஆதிக்கத்திற்காக நடக்கும் குரூரமான போட்டி, ஆளும் வர்க்கங்கள் அவர்களது ''சொந்த'' நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் மீதான சுரண்டலை உக்கிரப்படுத்துவதன் மூலம, மிகக் குரூரமான முறையில் உலகளாவிய செயல முறைகள் மூலம் வெளிககாட்டப்படுகிறது. மூலதனம் தொழிலாள வர்க்கத்துககு எதிராகத் தொடுக்கும் தாக்குதல் நாட்டுக்குப் பின் நாடாக வேலையின்மையில், சம்பளம் வெட்டுதலில், வேகப்படுத்தலில், தொழிற்சங்கம் உடைத்தலில், சமூக நல சேவைகளை வெட்டுவதில், ஜனநாயக உரிமைகளுக்கெதிரான தாக்குதலை மூர்க்கப்படுத்துவதில் நிலைநாட்டப்படுகிறது.

13. நீண்டகாலமாக மார்க்சிசத்தின் அடிப்படை கூற்று, வர்க்கப் போராட்டமானது, வடிவத்தில் மட்டுமே தேசிய ரீதியானது என்றும் சாராம்சத்தில் அது சர்வதேச ரீதியான போராட்டம் என்றும இருந்தது. என்ருலும் முதலாளித்துவ வளர்ச்சியின் புதிய தோற்றங்களில், வர்க்கப் போராட்டத்தின் வடிவம்கூட ஒரு சர்வதேசத்தன்மையை எடுக்கவேண்டியுள்ளது. தொழிலாளவர்க்கத்தின் மிகஅடிப்படை ரீதியான போராட்டங்கள்கூட அதன் நடவடிக்கைகளை ஒரு சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கவேண்டியதேவையை முன்வைக்கிறது. பொருளாதாரவாழ்க்கையின அடிப்படை ரீதியான உண்மை என்னவெனில், நாடுகடந்த கூட்டுக்கம்பெனிகள் ஒரு பூர்த்தி செய்யப்பட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு பல நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைக்கும் சக்தியைச் சுரண்டுகின்றன: அதோடு அவை தமத உற்பத்தியை அதி உயர்ந்த லாபத்தைத் தேடி பல்வேறு நாடுகளில், பல்வேறு கண்டங்களில் உள்ள தமது தொழிற்சாலைகளுக்கிடையில் உற்பத்தியை விநியோகிப்பதோடு இடம் மாற்றுகின்றன. உதாரணமாக ஃபோர்ட் எஸ்காட் (Ford Escort) ஐரோப்பிய மாடலின் பாகங்கள் உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் உட்பாக வலைப்பின்னல்—பிரிட்டனில் கார்புரேட்டர், எண்ணெய் பம்ப், சிலிண்டர் போல்ட்டுகள் — பெல்ஜியத்தில் சீட்பேட்கள் — ஸ்வீடனில் ஹோஸ் கிளாம்ப்ஸ் (Hose Clamps)→டென்மார்க்கில் ஃபேன் பெல்ட்டுகள்—இத்தாலியில் குளிர்நீக்கி வளைவுகள்—ஜப்பானில் (Alternators) ஆல்ட்டனேட்டர்ஸ்— அமெரிக்காவில் ஈ. ஜி. ஆர். வால்வுகளையும சக்கர நட்டுக்களையும் உற்பத்தி செய்வதைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு முன்னொருபோதும் இல்லாத அளவு மூலதனத்தின் சர்வதேசஇயக்கம் வெவ்வேறு நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்க இயக்கத்தின் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலாவதியாக்கி, முழுமையாக பிற்போக்காக்கின்றது. அப்படியான தேசிய வேலைத்திட்டங்கள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் ''அவர்களுடைய'' ஆளும் வர்க்கங்களுக்கு தன்னிச்சையாகவே கொடுக்கும ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு, உலகச் சந்தையின் ''அவர்களுடைய'' முதலாளித்துவ நிலைப்பாட்டைப் பலப்படுத்தும் தேவையுடன் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்களை வரிசைக்கிரமமாக குறைக்கின்றன

14. முதலாளித்துவ உற்பத்தியின் உலகத் தன்மையானது மேலும் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் அரசியல் பகைமைகளை பிரம்மாண்டமான ரீதியில் கூர்மைப்படுத்தியுள்ளது. இது மீண்டும் ஒரு முறை புறநிலை ரீதியாக உலகப் பொருளாதாரத்தின வளர்ச்சிக்கும் வரலாற்று ரீதியாக முதலாளித்துவ உடைமை வேரூன்றி இருக்கும் தேசிய அரசு வடிவத்துக்கும் இடையிலான சமரசம் காண முடியாத முரண்பாட்டை முன்னணிக்குக் கொண்டு வந்துள்ளது. திட்டவட்டமாக பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசத் தன்மையே அதாவது ஒரு வர்க்கம் எந்தவொரு முதலாளித்துவ ''தாய் நாட்டுக்கோ'' விசுவாசம் கொண்டிராதது, இத்தன்மையே அதனை நாகரிகத்தைக் குரல் வளையில் நெரிக்கும் தேசிய அரசு அமைப்பு சங்கிலியிலிருந்து விடுவிக்கக்கூடிய முழுமையான சமூக சக்தியாக ஆக்குகின்றது.



**1987 ஆகஸ்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தென் கொரியா மோட்டார் வாகனம் செய்யும் தொழிலாளர்கள்**

15. இந்த அடிப்படைக் காரணங்களினூடே எந்தவொரு நாட்டைச் சேர்ந்த ஆளும வர்க்கத்திற்கு எதிரான போராட்டமும், உலக ரீதியில் பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக அணி திரட்டும் நோக்கைக் கொண்ட சர்வதேச மூலோபாயமாக இருந்தால் மட்டுமே, தொழிலாள வர்க்கத்திற்கு நிலையான முன்னேற்றத்தை மட்டுமல்லாது, அதனுடைய இறுதியான விடுதலையைத் தானும் தயாரிக்க முடியும். பாட்டாளி வர்க்கத்தின் இந்த அவசியமான ஐக்கியப்படுத்தல ஒரு உண்மையான சர்வதேச பாட்டாளி வர்க்க, அதாவது ஒரு புரட்சிகரக் கட்சியைக் கட்டுவதன் மூலமே அடைய முடியும. தசாப்தங்களாக சளையாத சித்தாந்த மற்றும அரசியல் போராட்டங்களின் விளைபயனும் இப்படியான ஒரே ஒரு கட்சி மட்டுமே இருந்து வருகிறது. அதுதான் லியான் டிராட்ஸ்கியால் 1938-ல் அமைக்கப்பட்ட நான்காம் அகிலமாகும், அது இன்று அனைத்துலகக் குழுவினால வழிநடத்தப்படுகிறது.

### முதலாளித்துவ நெருக்கடியும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும்

16. முதலாளித்துவத்தின் நீடித்த வரலாற்று ரீதியான நெருக்கடியானது, இன்று பணவியல ரீதியான வளர்ச்சிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. இது சர்வதேச ரீதியாக வர்க்கப் போராட்டத்தில் ஒரு வெடிப்பை உண்டுபண்ணுவதுடன், அமெரிக்க ஐக்கிய அரசுகள் உட்பட அனைத்து பெரும ஏகாதிபத்திய நாடுகளிலும் புரட்சிகர நிலைமையை உருவாக்கும். தொழிலாள வர்க்கத்திற்கும், இதன் புரட்சிகர முன்னணிக்குமான இந்த நெருக்கடியின் முழுமையான தாதபரியத்தை, ஒரு வரலாற்று ரீதியான முன்னோக்கின் கட்டமைப்புக்குள் ஆராய்ந்தால் தான் புரிந்துகொள்ள முடியும.

17. நான்காம் அகிலத்தின் ஸ்தாபன ஆவணத்தில் டிராட்ஸ்கி இரண்டு உட்தொடர்புள்ள பிரேரணைகளை முன்வைத்தார். அவர் இந்த சகாப்தத்தை ஏகாதிபத்தியத்தின் மரணவேதனை என விளக்கினுர். அதே சமயம் மனித இனத்தின் நெருக்கடி சாராம்சத்தில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடி என வலியுறுத்தினுர். முதலாவது பிரேரணையின் உள்ளடக்கம் உலக முதலாளித்துவத்தின் ஆற்றொணு மற்றும் தீர்க்க முடியாத தன்மை பற்றிய புறநிலை ரீதியானதும் வரலாற்று ரீதியானதுமான கணிப்பாகும். இரண்டாவது பிரேரணையில் உள்ளடங்கியிருப்பது, ஒரு சமூக முற்போக்கை அடிப்படையாகக் கொண்ட இந்த வரலாற்று நெருக்கடியின் தீர்வானது, இறுதி ஆய்வில் பார்க்கையில் நான்காம் அகிலத்தைக் கட்டுவதிலேயே தங்கியிருக்கிறது என எச்சரிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# அனைத்துலகக் குழுவின்
# ன தீர்மானம்

இப்படியான இரண்டு பிரேரணைகள் சம்பந்தமாக என்றும் சரி ன்மையை அனைத்துலகக் குழு மட்டுமே வலியுறுத்துகிறது. உண் புரட்சிகர மார்க்சிசத்தின் அனைத்து குட்டி முதலாளித்துவ க எதிர்ப்பாளர்கள், தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் இருக் ள்கைகள், வேலைத்திட்டம் பற்றிய டிராட்ஸ்கிசத்தின்கூடுதலான த ஏற்றுக்கொள்ள முடியாதென நிராகரிக்கின்றனர். அதற்குப் அவர்கள்' டிராட்ஸ்கி வரலாற்று ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய ளித்துவ அமைப்பைக் குறைத்து மதிப்பிட்டு, பாட்டாளி வர்க்கத் ட்சிகரத் திறனை முற்று முழுதாக மிகை மதிப்பீடு செய்துள்ளார் ந்யே நிரூபிக்கின்றது என வலியுறுத்தினர்கள். இப்படியான கிசத்தின் 'நிராகரிப்பு' தவிர்க்க முடியாதபடி மார்க்சிசத்தின் டை ரீதியான கருத்துருக்களை ஏறக்குறைய வெளிப்படையாகவே பதில் முடிவடைகிறது. இப்படியான ஏகாதிபத்தியச் சித்தாந்த ்கள் கூறியதின்படி நான்காம் அகிலத்தின் 'தோல்வி' எனக் கரு து,பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாக தோல்வி கண்டதன் பிரதி அத்துடன் சோசலிசம் பற்றிய அனைத்து வரலாற்று முன்னோக் ால்வியுமாகும்.

அரசியல் பிற்போக்கான கடந்த தசாப்தத்தின் குட்டி முதலா அறிவு ஜீவிகள்மத்தியில், குறிப்பாக புரட்சிகர அரசியலில ஒரு டுபட்டவர்கள் மத்தியில் இப்படியான பின்னோக்கான கத்துவங் பரந்த ஆதரவாளர்களைப் பெற்றது ஆச்சரியமானதல்ல. இந்த நட்டின் கண்ணோட்டத்தை 'தொழிலாள வர்க்கத்துக்கு பிரியா (Farewell to the working Class) எனும் புத்தகத் லைப்பானது தெளிவாக சுருக்கிக் கூறுகிறது. இப்புத்தகத்தில் ஆசிரியர் ''முதலாளித்துவ வளர்ச்சி தொழிலாள வர்க்கத்தை பண்ணியுள்ளது. இது முழுமையாக உற்பத்திச் சாதனங்களை தியக்கத்தின் கீழ் கொண்டுவர முடியாதிருக்கின்றதோடு, அதன் த் தேவைகள் சோசலிச நியாயத்துடன் ஒத்ததாக இல்லை'',என்று ரமாய் கூறுகிறார்.

தொழிலாள வர்க்கம் அடைந்த தோல்விகள், பின்னடைவுகள் ற்றிற்கான காரணங்களைப் பாட்டாளி வர்க்கத்தின சமூகத்தன்மை டிபிடிக்க எடுத்த எண்ணற்ற முயற்சிகளின் வடிவங்கள் எவ்வளவு பறுபட்டனவாக இருந்தபோதிலும், அவை தொழிலாள வர்க்கத் டிக் கொடுத்த போலித் தலைமைகளுக்கு அரசியல வக்காலத்து வையாக அமைகின்றன, டிராட்ஸ்கி படுகொலை செய்யப்பட்ட , அவரது மேசையின்மேல் இருந்த அவரது கடைசிக்கட்டுரையில் ப் புரட்சியின் தோல்விக்கு பாட்டாளி வர்க்கத்தைக்குறைகாண வாகளுக்கு மிகவும் பொருத்தமான முறையில் பதிலளித்துள்ளார்.

டிராட்ஸ்கி எழுதுகையில், ''வரலாற்று ரீதியான பொய்மைப் இதில்தான அடங்கியுள்ளது. அதாவது ஸ்பானிய பரந்த மக்க ால்விக்கான பொறுப்பு உழைக்கும் பரந்த மக்களின் மேல சுமத் ன்றது. அது பரந்த மக்களின் புரட்சிகர இயக்கத்தை செயல செய்த, அல்லது அப்படியாக நசுக்கியகட்சிகளின்மேல சுமத்தப் ல. பூமகட்சியின (Poum) (ஸ்பானிய இடைநிலை வாதிகள) வக் வறுமன தலைவர்களின் பொறுப்பை நிராகரிக்கின்றனர். இதன் வாகள் சொந்தப் பொறுப்பைத் தாம ஏற்பதிலிருந்து தப்பித்துக் முயல்கிறார்கள். இந்த கையாலாகாத மெய்யியலானது,பிரபஞ்ச யின் சங்கிலித் தொடரில தோல்விகளை அறியமையாத ஒரு ாக நியாயப்படுத்த முயற்சிக்கின்றது. இது தோல்வியை ஒரு , வேலைத்திட்டங்கள், கட்சிகள், நபர்கள் என்ற ஸ்தூலமான அம அடிப்படையில் பிரச்சனையை முன்வைக்க முழுமையாகத் திற மட்டுமல்லாது, அது முன்வைக்கவும் மறுக்கிறது. இந்த விதப த மெய்யியலும சாஸ்டாங்கமாக விழுதலும் புரட்சிகர செயலின மான மார்க்சசத்தை நேரெதிராக எதிர்ப்பவையாகும்'' என்றார்,

கடந்த அரை நூற்றாண்டின் வரலாற்று அனுபவம் டிராட்ஸ்கி ப்வை அடிப்படையில் ருசுப்படுத்தியுள்ளது. மனித இனத்தை ாள்ளும வரலாற்று ரீதியான பிரச்சனைகளின தீர்வு தொழிலாள தின பற்றுக்குறைகளைப் பற்றிய புத்துமயங்கிய மற்றும் சிணுமுஞ்சித் ன ஊகங்களில் அல்ல இருக்கின்றது. அது தொழிலாள வர்க்க த்தை புரட்சிகர ரீதியாக அணிதிரட்டலைத் தடைசெய்கின்ற, அல் றுவிளைவிக்கின்ற தொழிலாள வர்க்கத்திலுள்ளும், அதன் விளிம்பு ளும உள்ள அரசியல போக்குகளுக்கு எதிராக தயவு தாட்சணய பாராட்டத்தில் தான் இருக்கின்றது இந்த போராட்டத்தைத் பதற்கு தொழிலாள வர்க்கத்தின அடிப்படை ரீதியான மூலோ னுபவங்களைப பற்றி கசடறப புரிந்து கொண்ட விளக்கமதேவை.

. உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதி பற்றிய மார்க்சிச ஆய் , உண்மையில் தவிர்க்க முடியாத ஒரு முடிவுக்கு வருகிறது; அதா ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயக வாதிகளும் வரிசைக கிரம த்திய காட்டிக கொடுப்புக்களே, சர்வதேச முதலாளித்துவ வர்க் 1930-ஆம ஆண்டுகளின மாபெரும் பொருளாதாரத் தாழ்வி உயிர்பிழைக்கவும வழி வகுத்து, இரண்டாம உலக யுத்தத்தைத் ர்ந்து பாட்டாளி வர்க்கமும காலனித்துவ வெகு ஜனங்களும ந்த உலகளாவிய எதிர்த்தாக்குதலிலிருந்தும உயிர் பிழைக்க முடிந் 1930-ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் தொழிலாள வர்க்கம தோல்விகள்—குறிப்பாக ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினி ஸ்டாலினிச மற்றும சமூக ஜனநாயகத் தலைவர்களின் துரோகக் கைகளினுல் ஏற்பட்டனவாகும். இவை நேரடியாக இரண்டாம் போருக்கு வழிவகுத்தன. 1930-ஆம ஆண்டுகளின் பூகோள ரீதி பொருளாதாரத் தாழ்விலருநது மீளவதற்கு,ஏறககுறைய 10 கோடி ன் உயிர்கள் உட்பட, பிரமமாண்டமான உற்பத்தி சக்திகளின் ளை அழிப்பதில் முடிந்த குரூரமான யுத்தம் ஒன்று தேவைப்பட்டது தை, ஒருபோதும மறந்துவிடக் கூடாது இவ்வாறு உலக யுத்தத் பிந்திய பொருளாதாரச் செழுமையானது, மனிதப் பிணங்களா மலையொன்றின் மேல கட்டப்பட்டது. இந்தப பயங்கர அழிவா அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு புதிய செல்வங்களுக்கான ஒரு வரு க அமைந்தது, மூலதனப்பசி கொண்ட பிரமமாண்டமான சந்தை அதன்முன இப்போது உருவானது. ஆனால் ஐரோபபாவிற்கு ிக்க மூலதனம செலவது, யால்டா, போர்ஸ்டாம், உடன்பாட்டுக் ரோப்பியத் தொழிலாள வர்க்கத்தின மேல் திணித்து, அது ஏகாதி த்துடன் ஒரு புரட்சிகரமான கணக்குத் தீர்த்தலைத் தடுத்த சமூக யக வாதிகளதும் குறிப்பாக ஸ்டாலினிஸ்டுகளதும் ஒத்துழைபபி தங்கியிருந்தது.



டாலரை உலக நாணயமாக நிலைநாட்டிய—
1944-ன் பிரட்டன் வூட்ஸ் ஒப்பத்தம்

24. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிற்பாடு புனர் நிர்மானம் செய்யப்பட்ட முதலாளித்துவ சமநிலையானது, முதலாளித்தவத்தின் ஆழமான முரண்பாடுகளைத் தீர்க்கத் தவறியது, உலக முதலாளித்துவம் அதன பிரம்மாண்டமான பொருளாதார விரிவாக்கத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுதே, இந்த ஆழமான முரண்பாடுகள் நெருக்கடியின் புதிய வெடித்தெழுதல்களைத் தயாரித்துக் கொண்டிருந்தன. உலகின் பிரதான ஏகாதிபத்திய வல்லரசு என்ற நிலையிலிருந்த பிரிட்டனின் இடத்தை அபகரித்துக் கொண்ட அமெரிக்க முதலாளித்துவத்தின் விசாலமான நிதி மற்றும தொழில் துறைப் பலம், உலக யுத்தத்திற்கும பிந்திய பொருளாதாரச் செழுமையின் அடித்தளமாக அமைந்திருந்தது. போருக்குப் பிந்திய உலக முதலாளித்துவத்தின் புனர்நிர்மாணம் எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பாவிலும ஜப்பானிலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் சிறகின் கீழ் தொடரப்பட்டது.

25. 1944-ஆம் ஆண்டு பிரட்டன் வூட்ஸ் ஒப்பந்தத்தின்படி 1 அவுன்ஸ் தங்கம் 35 டாலருக்கு சமம் என்ற விகிதத்தினபடி அமெரிக்க டாலர் உலக நாணயமாகியது. 1930-ஆம ஆண்டுகளில் உலகச் சந்தையைச் சிதறடித்த பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு மீண்டும செல்லாது தடுக்கவும், முதலாளித்துவ அரசுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை நெறிப்படுத்தவும, அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம, உலக வங்கி, மற்றும் வர்த்தக சுங்க வரிகள் பற்றிய பொது உடன்பாடுகள் போன்றவை நிறுவப்பட்டன. ஏகாதிபத்திய மையங்களில வர்த்தக மோதல்களைத் தணியச் செய்வதற்காக, மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க முதலாளித்துவ வர்க்கங்கள், நலன்புரி அரசுகளின் கொள்கைகளையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும தமது கொள்கைகளாக்கிக் கொண்டன.

26. உலகப் போருக்குப் பின்பான ஸ்திர நிலையின் அடிப்படை முரண்பாடுகள் பின்வருமாறு: சார்பு ரீதியான சமநிலை, ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஆதிக்க நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்க முதலாளித்துவம அதன் வெளிநாட்டுப பகையாளிகளை மீண்டும புனருத்தாரணம செய்வதற்கான காரணம், உலக சந்தையை புத்துயிரூட்டவும் ஐரோப்பாவிலும, ஜப்பானிலும புரட்சிகர அலையைத் தடுத்து நிறுத்தவுமாகும, இந்தக் கொள்கையில் அடங்கியிருந்தது, அதன சொந்த அழிவிற்கான வித்துக்களாகும் வெளிநாடுகளுக்கு இடைவிடாத அமெரிக்க மூலதனத்தின் ஏற்றுமதி 1960-களில ஒரு டாலர் நெருக்கடியை உண்டுபண்ணியது. அது அமெரிக்க ஆதிக்கத்தின் அடிப்படையில் இரண்டாம் உலகப் போரின் பின் உருவாக்கப்பட்ட சமநிலையில், உடைவுக்கான சமிக்ஞையைச் செய்தது,அமெரிக்காவின் நீடித்த அயல்நாட்டுச்செலுத்து நிலையின் (Balance of Payments) பற்றாக்குறை அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக நிலைப்பாட்டின் சீரழிவின நிதிப்பிரதிபலிப்பாகும். இந் நெருக்கடியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் பயனற்றவை என நிரூபிப்பதுடன், ஆகஸ்ட் 15, 1971-ல் பிரெட்டன்—வூட்ஸ் அமைப்பின் அடித்தளத்தை, டாலர் தங்கமாற்றை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் அமெரிக்க ஐக்கிய அரசுகள் அழித்தது.

27. முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சி காணும் சமனற்ற நிலை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினால் தூண்டப்பட்டதுடன், அதன் புத்துயிர் பெற்ற போராட்டங்களினால உக்கிரப்படுத்தப்பட்டது, 1920-களிலிருந்து சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும புரட்சிகர இயக்கத்துக்கான காலகட்டம் 1968க்கும் 75க்கும் இடையிலான பகுதியாக குறிப்பிடப்பட்டது. வியட்னும் தொழிலாளர் விவசாயிகளின் இராணுவ எதிர்ப்பினால்அமெரிக்க ஏகாதிபத்தியம் உடைத்து நொறுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் அதன் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த ஒரு சக்திவாய்ந்த எதிர்தாக்குதலை நடத்தியது. வரலாற்றிலேயே மிகப்பெரிய—பிரம்மாண்டமான பிரான்சின் மே, ஜூன், 1968 பொதுவேலை நிறுத்தம்—தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும் சர்வதேச எதிர்ததாக்குதலுக்கான அறிகுறியை வெளிப்படுத்தியது. அடுத்த ஏழு வருடங்களில் நாடடுக்குப்பின் நாடாக முன்னெருபோதும் இல்லாத அளவு அரசியல் கொந்தளிப்புக்குள் இழுக்கப்பட்டது.

28. 1960-களின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்க ஐக்கிய அரசுகள், மிகப் பரந்த மாணவர் எதிர்ப்புகளினாலும தொழிலாள வர்க்கத்தின் மிக வும் ஒடுக்கப்படும் பகுதியினரின் நகர்ப்புற எழுச்சிகரப் போராட்டங்களாலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட, தொழில்துறை வேலை நிறுத்தப் போராட்டங்களினாலும் நடுங்க ஆரம்பித்தது. வியட்னு

★8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்


www.padippakam.com



மில் எதிர்பாராத இராணுவத் தோல்வியின் பின்னணியில் அரசியல் நெருக்கடி, 1974-ல் நிக்சன் அரசாங்கம் உடைந்ததுடன் முடிவடைந்தது. ஜெர்மனியில் கூட்டாட்சிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து முதல் முறையாக 1969-ல் தொழிலாள வர்க்கத்தின் எதிர்த்தாக்குதல் சமூக ஜனநாயக வாதிகளை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. முதலாளித்துவ இத்தாலி "சூடான இலையுதிர் காலம்" எனப் பேர்பெற்ற 1969 வேலை நிறுத்த அலையினால் ஆட்டங்கண்டது. பிரிட்டனில் தொழிற்சங்க நடவடிக்கைகளை சட்டரீதியாகக் கட்டுப்படுத்த டோரி அரசாங்கம் எடுத்த முயற்சி, 1926க்குப் பின் மிகப்பெரும் வேலை நிறுத்த இயக்கமாக வந்த சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை எதிர்கொண்டது. அது 1974 ஆரம்பத்தில் ஹீத் அரசாங்கத்தை ராஜினாமாச் செய்ய நிர்ப்பந்தித்தது. அதே ஆண்டில் போர்ச்சுக்கலிலும், கிரீசிலும் இராணுவ, பாசிச சர்வாதிகாரங்கள் வீழ்ச்சி கண்டன. லத்தின் அமெரிக்கா முழுவதும்—பொலிவியா, சிலி, அர்ஜெண்டினாவில் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது அந்த நாள் நடப்பாக இருந்தது. ஆஸ்திரேலியாவில் 23 வருட கால லிபரல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சமூக ஜனநாயக விட்லம் அரசாங்கத்தை 1972 தேர்தலில் கொண்டு வந்தது, தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியுறும் போர்க்குணத்தைப் பிரதிபலித்தது. மூன்று வருட கால ஆழமான வர்க்க துருவ—முனைப்படுத்தலும் அரசியல் நெருக்கடியும், நவம்பர் 1975-ல் கவர்னர் ஜெனரலால் விட்லம் வெளியேற்றப்பட்டதுடன் ஒரு உச்சத்துக்கு கொணடுவரப்பட்டது.

29. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச புரட்சிகர இயக்கம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அதிகாரத்தின் கீழுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கடந்து செல்லாமல் இருக்கவில்லை. 1968-ல் பிராக்கின் வசந்த காலம்—செக்கோஸ்லோவேகியா மீதான சோவியத் யூனியனின் இராணுவ ஆக்கிரமிப்புடன் முடிவடைந்தது. ஆனால் சற்றே இரண்டு வருடங்களின் பின்பு போலந்து தொழிலாள வர்க்கத்தின் மிகப் பிரம்மாண்டமான புரட்சிகர இயக்கம் 'கோமுல்கா' அரசாங்கத்தைக் கவிழ்த்தது.

30. பிரெட்டன் ஊட்ஸ் அமைப்பின் டாலர் தங்க மாற்றுரிமை மற்றும் நிலையான நாணயமாற்று வீதங்கள் ஆகஸ்டு 71-ல் வீழ்ச்சி கண்டதிலான ஸ்திரமற்ற பிரதிவிளைவுகள் முதலாளித்துவ அமைப்பைப் புரட்சிகரமாகத் தூக்கி வீசுவதற்கான சாத்தியக் கூறை அதிகரித்தது. உடனடியாக உற்பத்தியில் ஒரு கூர்மையான உயர்ச்சி நிலைமை தொடர்ந்து இருந்தபோதிலும், அந்த செழுமை குறுகிய காலமானதென நிரூபிக்கப்பட்டது. ஆகஸ்டு 15-ன் பணவீக்கத்தாக்கம் 1973 இறுதியில் 'எண்ணெய் அதிர்ச்சிக்கு வழிவகுத்தது. அப்போது அரபு—இஸ்ரேல் யுத்தத்தின் இறுதியில் எண்ணெய்வள ஏற்றுமதி நாடுகள் (OPEC) எண்ணெய் விலைகளில் நான்கு மடங்கு அதிகரிப்பை அறிவித்தன. இது 1930-களில் இருந்து முதலாளித்துவத்தால் அனுபவிக்கப்பெற்றதில் மிக மோசமான பின்வாங்கலைத் தூண்டிவிட்டது.



1968 மே-ஜூன் நிகழ்ச்சியின்போது, பிரான்சின் ரெனூல்டு தொழிலாளர்கள் அவர்களுடைய ஆலையை ஆக்கிரமித்தல்

31. ஒழுங்கீனமான கொடிய இப்படியான காலங்களின்போது முதலாளித்துவம் உயிர்பிழைத்ததானது, 1950-களிலும் பார்க்கக் குறைவில்லாமல், இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்த இக்கட்டான முதல் வருடங்களில் ஸ்டாலினிச, மாவோவாத சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களிலும் உண்மையில் எப்பொழுதும் போலவே அமெரிக்க ஐக்கிய குடியரசுகளில் உள்ள முழுமையாகச் சீரழிந்த தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் மீதும் தங்கியிருந்தது. நாடடுக்குப்பின் நாடாக, பிரதான தொழிலாள வர்க்கக் கட்சிகள், சோசலிசப் புரட்சிக்கான பாதையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசைதிருப்ப நனவாக வேலை செய்தது, 1968-ல் பிரான்சிலும் 1969-ல் இத்தாலியிலும் 1971-ல் போர்ச்சுக்கல், கிரீசிலும் மீண்டும் ஸ்பெயினில் 1975-76லும் ஸ்டாலினிஸ்டு தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்தவும், ஆட்டம் கண்ட ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டவும், தமது சக்தியிலிருந்து அனைத்தையும் செய்தன. எல்லாவற்றிலும் பெரிய காட்டிக்கொடுப்பு சிலியில் செய்யப்பட்டது. அங்கே செப்டம்பர் 1973-ல் இராணுவ பாசிச சதிக்கு வழிவகுத்த சால்வடோர் அலண்டேயின் முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் தொழிலாள வர்க்கத்தை ஸ்டாலினிஸ்டுகள் முடிச்சுப் போட்டனர்.

32. சில தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு சமூக ஜனநாயக வாதிகளின் பங்களிப்பானது, உலகத்தின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் அவர்களின் பங்குடன் இசைந்ததாக இருந்தது. தனியாகவோ அல்லது ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடனோ இப்படியான ஆழமான அரசியல் பொருளாதார நெருக்கடி வருட காலங்களில் சமூக ஜனநாயக வாதிகள், ஏகாதிபத்தியத்தின் மிக அடிப்படையான நலன்களுக்கு சேவை செய்தனர். இந்த எதிர்ப்புரட்சிகர பாத்திரம் அதன் மிக சரியான வெளிப்பாட்டை ஜெர்மனியில்—பிராண்டின், போர்ச்சுகலில்—சோரஸின், ஸ்பெயினில்—கோன்சாலேயின், ஆஸ்திரேலியாவில்—விட்லெமின் (அவரின் ஆபீசிலிருந்து அவரின் சொந்த நீக்கத்தை ஏற்றுக்கொண்டு-கவர்னர் ஜெனரலின் சதிக்கெதிரான தொழிலாள வர்க்க இயக்கத்தைத் தடம்புரளச் செய்தார்) சிலியில்—அலெண்டேயின் கொள்கைகளிலும் எடுத்துக் காட்டியது.



கெனன்



மைக்கேல் பப்லோ

## நான்காம் அகிலமும் சந்தர்ப்பவாதமும்

33. ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்ததை குற்றம் சாட்டுவது எவ்வாறாயினும் போதுமானதல்ல. கேள்வி எழுப்பப்பட வேண்டும்: இந்தக் காலத்தில் நான்காம் அகிலத்தின் பங்கு என்ன? ஏன் அது தொழிலாள வர்க்கத்தின் தலைமையை ஸ்டாலினிஸ்டுகளிடமிருந்தும் சமூக ஜனநாயக வாதிகளிடம் இருந்தும் பிடுங்கி எடுத்து அதனை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியவில்லை?

34. இந்தக் கேள்விக்கான பதில் 1953-ல் இருந்து நான்காம் அகிலத்தின் வரலாற்றின் ஆய்வில் தங்கியிருக்கிறது. அப்படியான ஒரு ஆய்வு காட்டுவது என்னவென்றால், மே-ஜூன் 1968-ல் பிரெஞ்சு பொதுவேலை நிறுத்தம் வெடித்தெழுவதற்கு முந்தைய 15 வருட காலங்களில் நான்காம் அகிலம் பப்லோவாத சந்தர்ப்பவாத வளர்ச்சியினால், மிக மோசமாக பலவீனப் படுத்தப்பட்டிருந்தது.

35. 1951-ன் ஆரம்பத்திலேயே மூன்றாவது உலக மாநாட்டில், அப்பொழுது நான்காம் அகிலத்தின் செயலாளராக இருந்த பப்லோ ஒரு முன்மொழிவை முன்வைத்தார். அது ஸ்டாலினிசத்தின் மாற்ற முடியாத எதிர்ப்புரட்சித்தன்மை பற்றிய டிராட்ஸ்கியின் அடிப்படை மதிப்பீட்டுக்கு சவால்விட்டது மட்டுமல்லாமல், அதன் இடத்தில் அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் எனும் பல இடங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட தத்துவத்தை முன்வைத்தது; அவரின் நெருங்கிய கூட்டாளியான எர்னஸ்ட் மண்டேலின் ஆதரவுடன் அவர் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான தலைமைப் பங்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத்திய, உலக புரட்சிகர மூலோபாயத்தை நிராகரிக்கும்படி பிரேரித்தார். பதிலாக, அவர் நிலவுகின்ற தேசிய நிலைமைகளினால் நிர்ணயிக்கப்பட்ட, சந்தர்ப்பவாதத் தந்திரங்களினால் வழிகாட்டப்பட்ட, தேசியக்கட்சிகளின் ஒரு கூட்டாக நான்காம் அகிலத்தை உடைக்க செயல்பட்டார் நடைமுறையில் பப்லோவின் முன்மொழிவுக்கு. ஒரு குறிப்பிட்ட நாட்டில் தொழிலாள இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய எந்தவொரு அரசியல் சக்திகளுக்கும்—ஸ்டாலினிச, சமூகஜனநாயக, முதலாளித்துவ தேசியவாத அல்லது குட்டிமுதலாளித்துவ தீவிரவாத சக்திகளுக்கு—நான்காம் அகிலத்தின் பகுதிகளை அரசியல் ரீதியான சீழ்ப்படியச் செய்வதையே அர்த்தப்படுத்தியது. "அனைத்து ஸ்தாபன வழிப்பட்ட சிந்தித்தல்களை, அது சம்பிரதாய சுதந்திரமாகவோ அல்லது வேறு விதமாகவோ இருப்பினும் பரந்த இயக்கத்தினுள் அது ஒவ்வொரு நாட்டினுள்ளும் அதனை வெளிப்படுத்துகிறவாறு உண்மையான ஒருங்கிணைப்புக்கு அல்லது இந்த இயக்கத்தினுள் செல்வாக்கு செலுத்தப்படக்கூடிய ஒரு முக்கியமான நீரோட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியது அவசியம்" என பப்லோ வலியுறுத்தினர்.

36. நான்காம் அகிலத்தை அரசியல் ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் கலைத்துவிட அச்சுறுத்திய இந்த சந்தர்ப்பவாத தோற்றத்தை தோற்கடிப்பதற்காக சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) அமைப்பாளரான ஜேம்ஸ் பி. கெனனின் முன்முயற்சியான அனைத்துலகக் குழு ஆரம்பிக்கப்பட்டது. 1953 நவம்பரில் பிரிட்டனிலும் மற்றும் பிரான்சிலுமுள்ள டிராட்ஸ்கிஸ்டுகளின் ஆதரவுடன் கெனனால் வெளியிடப்பட்ட பகிரங்கக் கடிதம் பப்லோவாதிகளை வெளியேற்றும்படி அறை கூவியது.

37. பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தின் புறநிலைரீதியான விளைபயன்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் வெளிக் கொண்டுவரப்பட்டன சிறப்பாக கொலைபாதக சர்வாதிகாரியின் 1953-ஆம் ஆண்டு மரணத்திற்கும், பிப்ரவரி 1956-ல் குருஷ்சேவ், ஸ்டாலினின் சில குற்றங்களை அம்பலப்படுத்துவதற்குமிடையில் ஏற்பட்ட ஸ்டாலினிசத்தின் பெரும் நெருக்கடி உச்சகட்டத்தை அடைந்தது. இதையடுத்து நவம்பர் 1956-ல் ஹங்கேரியப்புரட்சி நசுக்கப்படுவதோடு பப்லோவின் அதிகாரத்துவ சுய சீர்திருத்த தத்துவமானது, முழுமையாக அம்பலப்படுத்தப்பட்டது. பப்லோவாதத்துக்கு எதிரான போராட்டமானது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கெனனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் 1957-ல் இருந்து பப்லோவாதிகளுடன் கோட்பாடற்ற முறையில் மீண்டும் இணைவதற்குத் திரும்ப ஆரம்பித்தனர். இந்த அபிவிருத்தி சோசலிசத் தொழிலாளர் கட்சியானது, என்றும் மேலும் வெளிப்படையாக ஐக்கிய அமெரிக்க அரசுகளில் உள்ள நடுத்தர வர்க்கத்தினரின் தீவிரவாதத்திற்கு அடிபணிந்தும், வழமையான பாட்டாளிவர்க்க நோக்கு நிலையைக் கைகழுவி விட்டதும் டிராட்ஸ்கிசத்தை வரலாற்று ரீதியாகக் காட்டிக்கொடுத்ததாக அமைந்ததோடு, அது சந்தர்ப்பவாதத்திற்கெதிரான அனைத்துலகக் குழுவின் போராட்டத்தைப் பாரதூரமாகக் கீழறுத்தது.

38. கேஸ்ட்ரோவினுடைய குட்டிமுதலாளித்துவ ஜூலை 26 இயக்கத்தை சோசலிசத் தொழிலாளர் கட்சி அரவணைத்து, அதை டிராட்ஸ்கிசத்தின் நியாய பூர்வமான ஒரு பிரதியீடு என்று பிரகடனப்படுத்தியதோடு, கியூபாவில் ஒரு தொழிலாளர்களின் அரசு அமைக்கப்பட்டாயிற்று என்று அறிவித்தது. இது நேரடியாக பப்லோவாதிகளுடன் மறு இணைப்புச் செய்து ஐக்கிய செயலாளர் குழுமத்தை அமைக்க இட்டுச் சென்றது. கேஸ்ட்ரோவை சோசலிசத் தொழிலாளர் கட்சி போற்றி புகழ்வதற்கு மையமாக அமைந்தது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சிகளை முழுமையாக்குவதற்கு சோசலிசப் புரட்சியும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் தேவையில்லை என்று கோரியதாகும். இந்த நிலைப்பாட்டின் மறுபக்கத்தின் அடிப்படையானது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை எல்லா தேசிய முதலாளித்துவப் பகுதிகளில் இருந்தும் நிலைநாட்டி, நான்காம் அகிலத்தின் பகுதிகளை அமைத்து, ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்திற்காகப் போராடுவதற்கு தேவையில்லை என்பதாய் இருந்தது. மறு இணைப்பை நிராகரித்து அனைத்துலகக் குழுவின் பதாகையைத் தற்காத்து நின்ற பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு டிராட்ஸ்கிஸ்டுகளால் இந்தக் காட்டிக் கொடுப்பு எதிர்க்கப்பட்டது. என்றாலும் அனைத்துலகக் குழு நான்காம் அகிலமாக இருந்ததின் ஒரு சிறிய சிறுபான்மையையே

★9ம்பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னோக்குகளின் தீர்மானம்...

கொண்டிருந்தது. பப்லோவினதும் மெண்டெலினதும் ஹேன்சனினதும் தலைமையைப் பின் தொடர்ந்த உலகம் முழுவதும் உள்ள இயக்கங்களில் சந்தர்ப்பவாதத்துக்கு ஏற்பட்ட வெற்றி, சர்வதேசத் தொழிலாள வர்க்கத்துக்கு அழிவுகரமான விளைபயன்களை ஏற்படுத்தியது.

39. இது மறு இணைப்புச் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்குள் எடுத்துக் காட்டப்பட்டது. 1964-ஜூனில் பப்லோவாத சர்வதேசத்தின் இலங்கைப் பிரிவான லங்கா சமசமாஜ கட்சி, (LSSP), நாட்டின் முன்னணி முதலாளித்துவ கட்சியான பண்டாரநாயகா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) ஒரு கூட்டரசாங்கத்தில் நுழைந்தது. 1953-ல் அனைத்துலகக் குழு அமைக்கப்படுவதை லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) எதிர்த்ததுடன், அதைத் தொடர்ந்து பப்லோவாதிகளுடன் SWP-ன் மறு இணைப்புக்கான தயாரிப்பில் மையப் பங்கு வகித்தது. நான்காம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் LSSP, இலங்கையில் அதன்வேலையில் அனைத்து அடிப்படை டிராட்ஸ்கிச கோட்பாடுகளையும், நிரந்தரப் புரட்சி தத்துவத்தின் முக்கியமான போக்குகளையும் வரிசைக்கிரமமாக நிராகரித்தது. இந்த காட்டிக் கொடுப்புக்கள் பப்லோவாதிகளால் மூடி மறைக்கப்பட்டன. ஜூன் 1963-ல் மறுஇணைப்புக்கான மாநாட்டில் சேர்த்துக் கொண்ட தீர்மானம் பிரகடனப் படுத்தியதாவது : ''எமது இலங்கைப்பிரிவு 1960-ல் SLFP-ன் மிதவாத முதலாளித்துவ அரசாங்கத்துக்கு ஆதரவளித்த அதன் தவறான அணுகுமுறையை முற்போக்கான முறையில் திருத்திக்கொண்டது. மக்கள் செயலுக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து, அது அதன் நேற்றைய தேர்தல் கூட்டாளிகளுக்கு எதிராக மக்களின் தலைமையின் முன்னணியில் அகனை நிறுத்திக் கொள்ளத் தயங்கவில்லை.'' சரியாக ஒரு வருடத்தின் பின் LSSP, SLFP-ன் தலைமையிலான கூட்டரசாங்கத்துடன் இணைந்தது. இந்தக் காட்டிக் கொடுப்பு ஆசியா முழுவதும் சோகமான பிரதி விளைவுகளை கொண்டிருந்தது. அது உடனடியாக ஸ்டாலினிஸ்டு மற்றும் மாவோயிச கட்சிகளின் கையைப் பலப்படுத்தியது. இந்த கட்சிகளின் அரசியல செல்வாக்கு. LSSP நிரந்தரப்புரட்சி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசப் போராடி இருக்குமாயின் சுக்குநூறாக்கப்பட்டிருக்கும். இந்த அர்த்தத்தில் LSSP-ன் காட்டிக் கொடுப்பு, 1965-ல் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கொள்கைகளினால் முழுமையாக நிராயுதபாணியாக்கப்பட்டிருந்த இந்தோனேசிய தொழிலாள வர்க்கத்தின் அழிவுகரமான தோல்விக்கு நேரடியாகப்பங்களித்தது.

40. பப்லோவாத சந்தர்ப்பவாதம் ஆயிரக்கணக்கான டிராட்ஸ்கிச ஊழியர்களை வரிசைக்கிரமமாக தவறான வழியில் இட்டுச் சென்று, இறுதியாக நான்காம் அகிலத்தின ஒரு பெரும் பகுதியை அழித்தது. ஸ்டாலினிஸ்டுகளின், சமூக ஜனநாயகவாதிகளின் வெளிப்படையான துரோகத்திற்கு ஒரு வெற்றிகரமான சவாலாக தொழிலாள வர்க்கம் வருவதிலிருந்து திசை திருப்புவதில் முக்கியமான அரசியல் பங்கை பப்லோவாதிகள் வகித்தனர். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சிகர சக்தி இல்லையென்று பப்லோவாதிகள் முழுமையாக நிராகரித்து, மாணவர்களை ஒரு புதிய புரட்சிகர முன்னணி எனப்போற்றினர். (மெண்டெலின்''சிவப்பு பல்கலைக் கழகங்கள்'' தத்துவம்) அத்துடன் பரந்த தொழிலாள வர்க்க இயக்கங்களின் ஸ்டாலினிச, சமூக ஜனநாயகவாத தலைமைக்கு எந்த ஒரு அரசியல் சவால் ஏற்படுவதையும் எதிர்த்தனர்.

41. லத்தீன் அமெரிக்காவில் பப்லோவாத இடைநிலைவாதத்தின் சந்தர்ப்பவாதத்தின் எதிர்ப்புரட்சிகரத் தன்மை தீர்க்கமாக நிலைநாட்டப்பட்டது. உள்ளூர் ஸ்டாலினிச சமூக ஜனநாயகக் கட்சிகளின் விதிவிலக்கான பலவீனமுள்ள சூழ்நிலைமை டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு தொழிலாள வர்க்கத் தலைமையை வென்றெடுப்பதற்கான ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் கேஸ்ட்ரோயிசத்தை பெரோனிசத்தை மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்தின் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தின் ஏனையவடிவங்களையும் பப்லோவாதிகள் போற்றிப் புகழ்ந்தது,1970 களில் பயங்கரமான தோல்விகளுக்கு கிரிமினல் பங்களிப்புகளாக இருந்தது. ஆகஸ்டு 1971-ல் இராணுவத்தின் கைகளில் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் தோல்வி, நேரடியாக இடைநிலைவாத POR-யினால் பின்பற்றப்பட்ட கொள்கைகளின் காரணத்தினாலாகும். சிலியில் பப்லோவாதிகளின் கலப்புவாதக் கொள்கைகள் அலண்டேயின், ஸ்டாலினிசத்தின்காட்டிக்கொடுப்புகளுக்கு வசதியளித்தது அலண்டேதேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் மூன்று வருடங்களுக்கும் சற்றுக் குறைவாக, சிலி தொழிலாள வர்க்கம் ஒரு உண்மையான புரட்சிகர நிலைமையை எதிர்கொண்டபொழுது, பப்லோவாதத் தலைவர் லூயிஸ் விட்டல் ஏற்கனவே தனது கட்சியை குட்டி முதலாளித்துவ MIR-னுள் கலைத்தபின் பின்வருமாறு எழுதினர்: ''கேள்விக்கிடமற்ற உண்மை யாதெனின், இரண்டாம் உலகப் போரின் பின்னைய காலக்கட்ட புரட்சிகள், நாளின் நடப்பாக இயங்குகின்ற கொரில்லாப் போர்த்தந்திரத்தை முன்வைத்தன. அதன் கேந்திர மையம் நாட்டுப்புறத்திலாகும்.'' இந்த சொற்கள் 1960-களில் பப்லோவாத முன்னோக்குகளின் குணம்சங்களாக இருந்தது. டிராட்ஸ்கிசத்தின் முழுவேலைத்திட்ட மரபையும் கைவிடுவதற்கு தத்துவார்த்த நியாயப்படுத்தலை வழங்கியது. அர்ஜெண்டினாவில் 1963-மறு இணைப்பினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் தவறான வழிகாட்டல், எந்த அளவும் குறைவில்லாத பயங்கரமான பிரதி விளைவுகளைக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எர்னஸ்டோ சேகுவாராவை டிராட்ஸ்கிக்கு சம இணையான அரசியல் தத்துவவாதியென துதிபாடிய மெண்டெலின் வழிகாட்டலின்கீழ் "பப்லோவாத இயக்கத்தின் ஒரு பிரிவினர் நகர்ப்புற கொரில்லா போர்த்தந்திரங்களின் பக்கம் திரும்பினர், மற்றும் சரீரரீதியாக அழித்தொழிக்கப்பட்டனர். மரினோவாலும் ஹேன்சனினாலும் தலைமை தாங்கப்பட்ட மற்றைய பிரிவு அழிவான முறையில் பெரானிடமும் முதலாளித்துவ அரசிடமும் சரணாகதி அடைந்தது. அனைத்து பப்லோவாதப் பிரிவுகளின் காட்டிக் கொடுப்புக்களின் இணைந்த உற்பத்தியே 1976-ல் ஜெனரல் விடெலாவின் வெற்றியாகும்

42. 1968-75 இடையிலான முக்கிய வருடங்களில் உலக நிலைமை பிரம்மாண்டமான சர்வதேச தொழிலாள வர்க்க எழுச்சியினாலும் பொருளாதாரக் கொந்தளிப்பினாலும் ஆட்டம் கண்டிருந்தபோது, ஏகாதிபத்தியம் உயிர் பிழைப்பதை சாத்தியமாக்கிய ஒரு முக்கியமான துணைப்பங்கை, பப்லோவாத இடைநிலைவாதிகளின் சந்தர்ப்பவாதம்—அது ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு வழங்கிய அதன் உதவியின்மூலம் வகித்தது. அது இடைநிலைவாதம் ஏகாதிபத்தியத்தின் இரண்டாம்தர ஏஜென்சி எனும் டிராட்ஸ்கியின் மதிப்பீட்டை ஊர்ஜிதம் செய்தது. இயற்கையாகவே குட்டி முதலாளித்துவ தோல்விவாதிகள், பாட்டாளி வர்க்கத்தின் கையாலாகாத தன்மை பற்றி அதிமேதாவித்தனமாக பேசிய அதே சமயம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு புதிய வளமான சந்தர்ப்பங்களைக் கண்டார்கள். மரணித்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் 1980-ஆம் ஆண்டுகள் வரையிலும் கூட உயிர்வாழ முடிந்தது என்பது சம்பந்தமாக அவர்கள் ஸ்தூலமாக ஆராய அக்கறை கொள்ளவில்லை பப்லோவாதிகளைப்பொருத்த அளவில், அவர்களுடைய சொந்தக் கொள்கைகளின் புறநிலையான முக்கியத்துவம் பற்றியோ வரலாற்று விளைபயன்கள் பற்றியோ, ஆராய அவர்கள் சிறிதும் கரிசனைகொள்ளவில்லை. இடைநிலைவாதிகளின், தீவிரவாதிகளின், வர்க்கநிலை இழந்த அறிவு ஜீவிகளின் அனைத்துக் குட்டி முதலாளித்துவ சகோதரத்தன்மை

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் திறன்களை முன்கூட்டியே உதறித் தள்ளுபடி செய்து, அதன் தோல்வி தவிர்க்க முடியாததென ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள், 1964-ல் இலங்கையிலும், 1968 ல் பிரான்சிலும், 1973-ல் சிலியிலும், 1974-ல் கிரீஸ் மற்றும் போர்ச்சுக்கலிலும் ஒரு சரியான மார்க்கிசக் கொள்கையின் விளைபயன்கள் என்னவாக இருந்திருக்கும் என்பதைப் பற்றிக்கூட ஒருபொழுமே சிந்திக்கவில்லை.

43. மறுபுறம் அனைத்துலகக் குழுவானது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதியில், பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய ரீதியான அனுபவங்களிலிருந்து தீர்க்கமான படிப்பினைகளை அகழ்ந்தெடுத்து, வரவிருக்கும் புரட்சிகர வெடித்தெழுதல்களுக்கான தயாரிப்புகளுக்கு அதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: உலக சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தைக்கட்டி சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்த, சந்தர்ப்பவாதத்திற்கும் இடைநிலைவாதத்திற்கும் எதிராக சமரசமற்ற சளையாத போராட்டம் தேவையானது.

### சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தின் ஒரு வரலாற்று இருப்பு நிலைக்குறிப்பு

44. 1953-ஆம் ஆண்டில் நான்காம் அகிலத்தினுள் சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சியை எதிர்த்துப் போராட அனைத்துலகக் குழு அமைக்கப்பட்ட பொழுது, ''வைதீக டிராட்ஸ்கிசத்தின்'' (Orthodox Trotskyism) வேலைத் திட்டத்திற்கு எதிரான திருத்தல்வாதத் தாக்குதல்களை எதிர்த்து சர்வதேச வேலைத்திட்டம் ஒன்றைத் தொடுக்கும்படி கெனனுடைய உலக டிராட்ஸ்கிச இயக்கத்திற்கோர் பகிரங்கக் கடிதம் அறைகூவல் விடுத்தது அது மார்க்சியத்திற்கும் பப்லோவாதத்திற்கும் இடையிலான பிளவு சமரசத்திற்கு சாத்தியமில்லாத அளவு ஆழமானது என்று வலியுறுத்தியது. பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்களும் அரசியலும் நான்காம் அகிலத்தினுள் வெற்றி ஈட்டுவனவாயின், சர்வதேச தொழிலாள இயக்கத்தினுள் டிராட்ஸ்கிசம் ஒரு இயக்க பூர்வமான புரட்சிகரசக்தியாக இருப்பது கலைத்து அழிக்கப்படும்'' என்று கெனன் எச்சரிக்கை செய்தார்.



**1964ல் இலங்கையில் ஒரு முதலாளித்துவ கூட்டு அரசாங்கத்தினுள் புகுந்த லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு**

45. ஆனால் சில வருடங்களினுள் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் தலைமை பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தைக் கைவிட்டு, 1953-ஆம் ஆண்டில் பிளவிற்கு வழிகோலிய வேலைத் திட்டப் பிரச்சனை சம்பந்தமாக எந்தவித கலந்துரையாடலும் இன்றி, பப்லோவாத சர்வதேச செயலாளர் குழுமத்துடன் மீண்டும் இணைவது பற்றி வலியுறுத்த ஆரம்பித்தது. இந்த கோட்பாடற்ற ரீதியில் மீண்டும் இணைவதற்கான யோசனை கோட்பாடற்றது ஏனென்றால், அது திட்டவட்டமாக 1953 ல் கிளப்பப்பட்ட பிரச்சினைகள்பற்றிய கலந்துரையாடல்கள் தலைதூக்காது நசுக்குவதை அடிப்படையாகக் கொண்டிருந்ததனால்—அனைத்துலகக் குழுவின் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் பகுதிகளினாலும் சோசலிசத் தொழிலாளர் கட்சியினுள் உள்ள ஒரு சிறுபான்மையினராலும் எதிர்க்கப்பட்டது இந்த எதிர்ப்புக்கு எதிராக ஜூன் 1963-ல் மீண்டும் மறு இணைப்பு செய்யப்பட்டது.

46. அனைத்துலகக்குழு அமைந்து 35 வருடங்களுக்குப் பின்னும் சோசலிசத் தொழிலாளர் கட்சி-பப்லோவாத மறு இணைப்பின் கால் நூற்றாண்டுக்குப் பிற்பாடும் நான்காம அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் அடிப்படை ரீதியான வேலைத்திட்ட விளைபயன்களைப்பற்றி, ஒரு முழுமையான பாலன்ஷீட் ஒன்றை வகுக்கக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் சந்தர்ப்பவாதத்தின் தன்மைக்கேற்ப, பப்லோவாதம் டிராட்ஸ்கிசத்துடனான அதன் வேறுபாடுகளை ஒரு வரிசைக்கிரமமாக எடுத்துக்கூற ஒருபொழுதும் முற்படவில்லை. ஆனால் அதன் திருத்தல்களின் ஒட்டுமொத்தம் குறிப்பாக டிராட்ஸ்கிசத்தினதும், பொதுவாக மார்க்சிசத்தினதும் அடிப்படைக் கோட்பாடுகள் அத்தனையையும் முற்றுமுழுதாக நிராகரிப்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பப்லோவாதிகள் நான்காம் அகிலம் அமைக்கப்பட்ட தன் அரசியல் அத்திவாரங்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளார்கள். அதாவது அவர்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வரலாற்றுரீதியானதும் சமூகரீதியானதுமான செயற்பாடுபற்றி டிராட்ஸ்கியின் ஆய்வையும் அவரது நிரந்தரப் புரட்சி தத்துவத்தையும் நிராகரித்துள்ளார்கள். இன்று பப்லோவாத தத்துவங்களை தீர்க்கமான வரலாற்று அனுபவங்களின் வெளிச்சத்தில் கணிப்பிடுவது சாத்தியமாக இருக்கிறது.

### ஸ்டாலினிசத்தின் பங்கு பற்றி பப்லோவாதம்

47. பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்கள், சோவியத் அதிகாரத்துவத்துக்கு ஒரு புரட்சிகரப் பங்கு இருக்கின்றதென நியாயப்படுத்தும் முயற்சியில் அவற்றின் முதலாவது வெளிப்பாடுகளைக் காட்டின. பப்லோவினாலும் எர்னஸ்ட் மண்டெலினாலும் வகுக்கப்பட்ட சாசனத்தில், முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் போராட்டம், வரலாற்று வளர்ச்சிப்போக்குக்கு இனிமேல் உந்துசக்தி அல்ல என்பதாகும். பதிலாக அது மார்க்சியத்தினால் விஞ்ஞான ரீதியாக வரையறுக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் பப்லோவின் கருத்தின்படி, ''முதலாளித்துவ ஆட்சி மற்றும் ஸ்டாலினிச உலகம்'' எனப்படும் இரண்டு சக்திவாய்ந்த முகாம்களுக்கு இடையிலான மோதலினால் கடந்து சென்றுவிட்டது. இந்த புதிய ''புறநிலையான சமூக

★10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்....,

எதார்த்தத்தினுள்'' நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் ஏகாதிபத்திய மற்றும் ஸ்டாலினிச ஆட்சிகள் இரண்டிற்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத்தை புரட்சிகரமாக அணிதிரட்டுவதற்கு இடமே இல்லை. இரண்டு முகாம்களுக்கு இடையிலான பூகோளப்போர் தவிர்க்க முடியாததெனவும், அந்த 'அப்படியான போர்'' அதன் ஆரம்பத்திலிருந்தே ஒரு சர்வதேச உள்நாட்டுப் போரின் தன்மையைக் கொண்டிருக்கும் என்ற முடிவுக்கு பப்லோ வந்ததிலிருந்து டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு, இருந்துவரும் ஸ்டாலினிச கட்சிகளினுள் செல்வாக்கு செலுத்தி அவற்றை இடது பக்கம் செல்ல வைக்கும் முயற்சியைத் தவிர வேறு எதுவும் அங்கே செய்வதற்கு இருக்கவில்லை. ஸ்டாலினிசக் கட்சிகளினுள் இயங்கிவரும் டிராட்ஸ்கிஸ்டுகளின் இரண்டாம்தர உதவியுடன் புறநிலை நிபந்தனைகளின் முழுமையான சக்தி. இப்படியான கட்சிகளை இடதுபக்கம் தள்ளி, ஏகாதிபத்திய ஆட்சிகளைத் தூக்கிவீச அவர்களை நிர்ப்பந்திக்கும் என்றும், இவ்வாறாக நூற்றாண்டுகளுக்கு நிலைத்திருக்கும் ''ஊனமுற்றதொழிலாளர் அரசுகள்'' ஸ்தாபிக்கப்படும் என்று பப்லோவாதிகள் கூறினர்கள்.

48. வரலாறு ஈவிரக்கமற்ற முறையில் இந்தப் போலியான முன்னோக்கின் மேலெழுந்த வாரியான தன்மையை அம்பலப்படுத்தியது. பப்லோ அவரது கருத்தான ''புறநிலையான சமூக எதார்த்தத்திற்கு'' இரட்டை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தார்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க நிலை ஒரு புறமும் சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதிக்க நிலை மற்றொரு புறமுமாகும்—இவை மோசமடைந்து செல்லும் அமெரிக்க அயல்நாட்டு செலுத்து நிலையினாலும் (Balance of Payments) சோவியத் அதிகாரத்துவத்துக்கு எதிராக கிழக்கு ஐரோப்பாவில் வெடித்தெழுந்த எழுச்சிகளினாலும் விரைவாகவே முரண்பாடடைய ஆரம்பித்தன.

49 இது வெறுமனே ''போர்—புரட்சி'' தத்துவத்தின் பிரம்மாண்டமான டம்பங்கள் பற்றியதல்ல. ஆனால் மிக முக்கியமாக அதிகாரத்துவ சுயசீர்திருத்தம், ஸ்டாலினிசத்துக்கு இருக்கும் புரட்சிப்பங்கு பற்றி கோடிட்டுக் காட்டப்படும் கருத்துரு வரலாற்றினால் மதிப்பிழந்ததைக் காட்டுகிறது. ஸ்டாலினிசத்தின் இயல்பான பரிணாமம் இடது பக்கமாக இருக்கவில்லை, அதாவது உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டமாக இருக்கவில்லை. அதற்கு நேர்மாறாக அது தொடர்ச்சியாக வலது பக்கம் நோக்கியே இருந்தது, அதாவது தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக உலக ஏகாதிபத்தியத்துடன் மேலும் அதிகரித்துச் செல்லும் நேரடிக் கூட்டை நோக்கியதாய் இருக்கிறது.

50. இருந்தபோதிலும் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் ஸ்டாலினிசத்துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் உக்கிரப்படுத்தப்பட்ட சுதந்திரமான புரட்சிகரப் போராட்டத்தின் அவசியம் முன்வைக்கப்பட்டபொழுது, அதிகாரத்துவத்தின் ஆற்றொணா யுக்திகளை, சுயசீர்திருத்த நிகழ்வுப்போக்கின் புதிய மற்றும் இன்றியமையாத சம்பவம் என்ற பிரமையை பப்லோவாதிகள் வளர்த்து வந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் பப்லோவாதிகள் அதிகாரத்துவத்தில் மார்க்சிசத்தின் ஒரு மரண எதிர்ப்பை அல்ல, ஆனால் பலவிதமான டிராட்ஸ்கிசப் பிரிவுகளை வளர்ச்சி செய்வதற்கான அரசியல் விளைநிலத்தையே கண்டனர். இவ்வாறு 1962 மார்ச்சில் பல்வேறு ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினுள்ளும் அதன் கூட்டாளிகளினுள்ளும் தோன்றுகின்ற தகராறுகளை ஆராய்ந்த எர்னஸ்ட் மண்டெல், பின்வரும் வியக்கத்தக்க ஆய்வைச் செய்தார்:

51. ''சர்வதேச கம்யூனிச இயக்கத்துள் இன்று நடக்கும் விவாதம் ஒரு புரட்சிகர மார்க்சிசத்தை ஒரு உடைந்த முறையில், அதாவது சூரிய கதிர்களை எப்படி படிகம்'அது கொண்டுள்ள வண்ணங்களின் நிறமாலையாகப் பிரிக்கின்றதோ அப்படி பிரதிபலிக்கின்றதென்று கூறமுடியும். விவாதத்தில் பங்கு கொள்வோரில் டிராட்ஸ்கிச நிலைப்பாடுகள் அத்தனையையும்.காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனல் இன்றைய இந்தப் போக்குகள் எதுவும் அவற்றை முழுமையாய் ரஷ்யர்கள் ஏற்கவில்லை, ஸ்டாலினிச மரபைக் கலைக்கின்றார்கள் சீனர்கள் நிரந்தரப் புரட்சி தத்துவத்திற்கு கிட்டுமானமாக வருகிறார்கள்; கியூபர்கள் தைரியமாக ஒரு தொழிலாளர் அரசு மற்றைய நாடுகளின் பாட்டாளிகளுக்கு, புரட்சியை சர்வதேச ரீதியாகவிஸ்தரிக்க அறைகூவல் விட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்; யுகோஸ்லாவியர்கள் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாள சபைகளின் கைகளில்இருக்க வேண்டும் என்று விளக்குகிறார்கள்; இத்தாலியர்கள் (அவர்களிலும்பார்க்க குறைவாக போலந்தவர்கள்) கட்சிக்குள்ளும் தொழிற்சங்கத்திற்குள்ளும் லெனினிய மரபான சுதந்திரக் கலந்துரையாடலுக்குத் திரும்புகிறார்கள்; அல்பேனியர்கள் பெரிய அளவினதாயினும் சிறிய அளவினதாயினும் எல்லாக்கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் சம உரிமை என்னும் கோட்பாட்டையும் எல்லா சர்ச்சைகளையும் மனம் திறந்த நேர்மையான சர்வதேச கலந்துரையாடல்கள் மூலம் தீரத்துவைக்க வேண்டிய தேவையைப் பிரகடனப்படுத்துகின்றனர். புரட்சிகர மார்க்சிசத்தின் ஒரு அடிப்படை ரீதியானநிலைப்பாடு மட்டும் இந்தக் கட்சிகள் ஒன்றினால் கூட ஆதரிக்கப்படவில்லை. இது எமது டிராட்ஸ்கிச இயக்கத்தின் 'ஏகபோகமாக' இருந்து வருகிறது: அதாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை வழி நடத்தவும் ஒருமுகப்படுத்தவும் ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியத்தின் முற்றுமுழுதான தேவையாகும்.'' உண்மையில் அது மட்டுமே!

52. 1963 மறு இணைப்பின் தறுவாயில் எழுதுகையில் மண்டெல், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளே ஏற்பட்டுவரும் சுயசீர்திருத்தல் போக்குகள் ஒரு புதிய அனைத்துலக புரட்சிகர இயக்கத்திற்கு இட்டுச் செல்லும் எனவும் நான்காம் அகிலம் அதில் ஒரு பாகமாக இருக்கும் எனவும் நம்பினர்;இன்றைய பிளவுகள், குழப்பங்கள் ஊடாக உலக கம்யூனிச இயக்கம் தவிர்க்க முடியாதபடி தனது சொந்த விதிகளின்படி உயர்மட்டத்திற்கான ஒரு ஐக்கியத்தையும் ஒரு அமைப்பையும் நோக்கியும், எமது சகாப்தத்திற்குப் பொருத்தமான லெனினிச வேலைத்திட்டத்தின் அடிப்படையினைக் கொண்ட ஒரு கம்யூனிஸ்ட் அகிலத்தை நோக்கியும் சென்று கொண்டிருக்கிறது'' என்றார்.

53. பப்லோ, அவரது பழைய கூட்டாளியை விஞ்ச விடாதவாறு ஸ்டாலினிசத்துடனான பிளவின் மீண்டும் திருப்ப முடியாத தன்மையை பகட்டாகக் கூறுகையில், ஸ்டாலினுடைய மரணத்தின் பத்தாண்டுகளின் பின் குறிப்பாக சோவியத் யூனியனில் ஸ்டாலினிச ஒழிப்புப் போக்கானது மீண்டும் திருப்பமுடியாதது மட்டுமன்றி, சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதன் புரட்சிகர புதுப்பித்தலுக்கான அடிப்படைகளை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது என்றவாறான பரிமாணத்தை எடுத்திருக்கின்றது. மற்றைய தொழிலாள அரசுகள் என்னவாக இருந்தபோதிலும்; புரட்சிகர தலைமையை பின்னே விட்டவாறாக, சோவியத் யூனியனது 'சீர்திருத்தம்' கூடிய ஒரு சகாப்தப்பாதையில் செல்லவில்லை. ஆனல் அதற்கு மாறாக, அது உலகப் புரட்சிக்கு ஆதரவாக, ஒரு ஸ்திரமான, தீர்மானகரமான, தெளிவான பங்கை நோக்கி செயற்படுகிறது.

54. ஸ்டாலினிசத்திற்கு பப்லோவாதிகளின் அடிபணிவு,டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தின் திரிதல்களுடன் நிற்கவில்லை. அது நான்காம் அகிலத்திற்கு எதிராக கிரெம்ளின் அதிகாரத்துவத்தின் ஜி. பி. யு. (G. P. U.)—கே. ஜி. பி. (K G B) ஏஜெண்டுகளால் செய்யப்பட்ட குற்றங்களை மூடி மறைப்பதற்கும் கூட இட்டுச் சென்றது. 1950-களின் வாக்கிலிருந்து, டிராட்ஸ்கி மற்றும் அவரது மகன் லியான் செடோவ் உட்பட நான்காம் அகிலத்தின் முன்னணி உறுப்பினர்களின் படுகொலைகளுக்கு ஏற்பாடு



ஜோசப் ஹேன்சன்



சில்வியா பிராங்ளின்

செய்த ஸ்டாலினிச ஏஜெண்டுகள் தொடர்பான எந்தவித புலன் விசாரணைகளையும் பப்லோவாதிகள் எதிர்த்தே வந்தனர். 1955 மார்க் ஜிபோரோவ்ஸ்கியைப் பற்றிய அம்பலப்படுத்தல்களைத் தொடர்ந்து—செடோவ், நான்காம் அகிலத்தின் செயலாளர் ருடால்ப் களமெண்ட், மற்றும ஜி. பி. யு, விலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர் இக்னஸ்ரெய்ஸ் ஆகியோரை கொல்வதற்கு ஸ்டாலினிஸ்டுகளால் பயனபடுத்தப்பட்ட தகவல்களைக் கொடுத்த, ஜி. பி. யு, வின் பிரதான ஏஜண்ட் ஜிபோரோவ்ஸ்கி நான்காம அகிலத்தின் பாரிஸ்மையத்தினுள்வே இருந்தார்—ஜிபோரோவ்ஸ்கியின் கடந்த கால நடவடிக்கைகளை நான்காம அகிலம புலன விசாரணை செய்வதற்கான தீர்மானத்தை எர்னஸ்ட் மண்டெல் நேரடியாகவே எதிர்த்தார்.

55. லியான்டிராட்ஸ்கியின் படுகொலை சம்பந்தமாக புலன்விசாரணை நடத்த, 1975-ல் நானகாம் அகிலத்தின் அனைத்துலகக்குழு நான்காம் அகிலமும் பாதுகாப்பும் என்பதை ஆரம்பித்தது. இக்கொலைக் குற்றத்தைத் தொடர்ந்து உடனடியாக சோசலிச தொழிலாளர் கட்சி (SWP)யின் வழக்கறிஞர் ஆல்பர்ட் கோல்ட்மெனால் முதல் முறையாக இப்படியான புலன் விசாரணை நடத்தபட்டது. அமெரிக்க அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வமான மற்றும முன்னர் வகைப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தஸ்தாவேஜுகளில்—அவற்றுள் பல தகவல் சுதந்திரச் சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. அந்த தஸ்தாவேஜுக்கள், இந்தப் படுகொலைக்காக பெரிய அளவு ஜி. பி யு. (G.P.U.) வலைப்பின்னல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையை பளிச்செனக் காட்டியது ஆரம்பத்திலிருந்தே இந்தப் புலன் விசாரணை பப்லோவாதிகளால் கண்டிக்கப்பட்டது. டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு எதிரான ஜி. பி. யு. (G. P. U.) குற்றங்கள் பற்றி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் புதிதாக வெளிக் கொணரப்பட்ட ரகசியங்கள், என்றுமில்லாத அளவு வெளிப்படையான தங்களின் ஸ்டாலினிசக் கட்சிகளுடனான கூட்டினைத் துண்டித்துவிடும் என பப்லோவாதிகள் அஞ்சினர்.

56, ஒரு சமயம் கோயோகானில் (Coyoacan) லியான் டிராட்ஸ்கிக்கு செயலாளராகப் பணிபுரிந்த, அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) பப்லோவாதத் தலைவர் ஜோசப்ஹேன்சன், 1940 படுகொலைக்கு முன்னரே ரகசியமாக ஜி. பி. யு: (G,P.U.) வை சந்தித்ததையும், ''தண்டனை பயமின்றி தகவல்களை தெரிவிப்பதற்காக, ஒருவரிடம்'' ரகசியத் தொடர்பை ஏற்படுத்தித் தரும்படி அமெரிக்க அரசாங்கத்துடன் பின்னர் கலந்துரையாடலில் ஈடுபட்டதையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் புலன் விசாரணை வெளிப்படுத்திய தகவல்கள் அடையாளம் காட்டியபொழுது, பப்லோவாதிகளின் எதிர்ப்பானது வெறித்தனமாக மாறத் தொடங்கியது, 1940-ல் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) உயிர்வாழ்ந்து கொண்டிருந்த தலைமை உறுப்பினர்களால்—கொடுக்கப்பட்ட சத்திய பிரமான சான்றுகளின் அடிப்படையில்—கட்சி, அமெரிக்க அரசாங்கத்துடனான ஹேன்சனின் தொடர்புகள் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டது.

57. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால், நான்காம் அகிலமும் பாதுகாப்பும் என்பதனுள் திரட்டபபட்டிருந்த ஆதாரங்களை ஆய்வு செய்யவும், தீர்ப்பு அளிக்கவும் விசாரணைக்குழுவினை நிறுவுவதற்காக, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் அழைப்புக்கள் விடுக்கப்பட்டபொழுது, பப்லோவாதிகள் அவற்றைத் திரும்பத் திரும்ப நிராகரித்தனர். பதிலாக, ''வெட்கமற்ற ஜேப்டிம்பு'' என்று புலனாய்வைக் கண்டிப்பதற்காக, சர்வதேச பிரச்சாரத்திற்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர். இந்த வகையில்''ஜோடிப்புக்கள்''என அழைக்கப்படுபவற்றின அப்பாவிப்பலியாட்களாக அவர்கள் வக்காலத்து வாங்குபவர்களுள் ஹேன்சன் மட்டுமல்ல, கடந்த 1930 களில் மற்றும் 1940 களில் ஜேமஸ் பி. கெனனின் தனிச் செயலாளராக இருந்த சில்வியாபிராங்ளினுமாவார், இப்பெணமணி ஸ்டாலினிஸ்டுளால் திட்டமிடப்பட்டு வைக்கப்பட்டவர் என்று ஜி. பி. யு (G .P. U.) வில் இருந்து வெளியேறிய லூயிஸ் புடன்ஸினால் 1947-ல் அமபலப்படுத்தப்பட்டிருந்தார். புடன்ஸின வெளிப்படுத்தல்களுக்குப் பிறகு பிராங்ளின் திடீர் தலைமறைவு ஆகியிருந்தபோதிலும், மற்றும் அதனைத்தொடர்ந்து அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து, தனது முனைனுள் ஜி. பி, யு. கட்டுப்பாட்டு அதிகாரி ராபர்ட் ஸோப்லனுக்கு எதிராக வழக்குத் தொடுப்பது பற்றிய தயாரிப்பில் இருந்தபோதிலும், ஹேன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் (SWP) அவரை ''சீரிய'' தோழர் என்று தொடர்நது புகழ்ந்தனர். சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP)யின தலைவர் ஜாக்பான்ஸ், பிராங்ளின் தன்னுடைய தனிப்பட்ட நாயகராக இருந்தார் என்று பகிரங்கமாக அறிவித்தார். ஆனல் 1983-ல கட்சித் தலைமையில் உள்ள அரசாங்க ஏஜெண்டுகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் எதிராக, சோசலிசத் தொழிலாளர் (SWP) கட்சியின் முன்னாளைய உறுபபினர் அலன் செல்பண்டினால் (Alan Gelfand) வழக்குத் தொடுக்கபபட்டதன் விளைவாக, 1954 மற்றும் 1958-ல் உயர் மன்ற நடுவர்களின் முன்வைக்கப்பட்ட பிராங்ளினின தஸ்தாவேஜுகள்—இதுவரையில் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த தஸ்தாவேஜுகள்-கடைசியாக வெளியிடப்பட்டன. தாம் சோசலிசத் தொழிலாளர் கட்சிக்குள் ஸ்டாலினிச உளவாளியாக செயல்பட்டிருந்ததை பிராங்ளின் ஏற்றுக்கொண்டார் என்பதை, கையெழுத்துப் பிரதிகளின் நகல்கள் காட்டுகின்றன. ஹேன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் பிராங்ளினை விடாப்பிடியாக பெண்யதை விளக்கும சான்றினையும் கூட கெல்பண்ட் பெற்றுக்கொண்டார். ஹேன்சன் கூட ஜி. பி. யு. (G.P.U) ஏஜண்ட் என்று லூயிஸ் புடன்ஸினல் இனங்காட்டப்பட்டதானது, ஹேன்சனின் தனிப்பட்ட சதித் தொடர்புகளிலிருந்து தோன்றுகிறது. அனைத்துலகக் குழுவின் இந்த மறுக்க முடியாத நிரூபனமான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் பப்லோவாதிகள் பிராங்களின் மற்றும் ஹேன்சனைத் தொடர்ந்தும் பாதுகாத்தனர். இவவாறாக ஏஜெண்டுகளைப் பாதுகாத்தல், ஸ்டாலினிசம் மற்றும ஏகாதிபத்தியத்தின் பேரில் நான்காம் அகிலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக அலட்சியமாக இருத்தல்,பப்லோவாதிகளின் டிராட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்பின் மிகவும் கேவலமான வெளிப்பாடு மட்டுமேயாகும்

★அடுத்த இதழில் தொடரும்

படிப்பகம்

www.padippakam.com



# தோழர் பீட்டவலவின் நினைவு நீடூழி வாழ்க!

தத்திற்கு, கம்யூனிஸ்ட் கட்சியின், லங்கா சமசமாஜக் கட்சியின், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஸ்டாலினிச, இடைநிலைவாத, சீர்திருத்தவாத தலைவர்களின் ஆதரவினால் பலப்படுத்தப்பட்ட தென்பதை அவர் வலியுறுத்தினார். தொழிலாள வர்க்கத்தை ஒருபுரட்சிகர வேலைத்திட்டத்தில் சுதந்திரமாக அணி திரட்டி, சோசலிசப் புரட்சியின் பக்கத்துக்கு நாட்டுப்புற வறிய மக்களை வென்றெடுப்பதன் மூலம்மட்டுமே, நாட்டுப்புறங்களில் பிற்போக்கு ஜே.வி.பி.யை தோற்கடிக்க முடியுமென அவர் உறுதியாக நம்பினார், இதற்கு, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரசினால் பின்பற்றப்பட்ட மக்கள் முன்னணி அரசியலை தோற்கடித்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல சுதந்திரத்தை நிலை நாட்டுவது அவசியம் என்று, அவர் கூறினார்.

இவ்வாறான வழிகளில், தொழிலாள வர்க்கத்துக்கு கல்வியூட்டுவதில் ஒரு முக்கியமான பகுதியாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இடைநிலைவாத தலைமைக்கு எதிரான போராட்டம் இருந்தது- ஒரு சமயம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவளிப்பதாக கூறிய இப்படியான இடைநிலைவாத தலைவர்கள், இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்பதன் மூலம் ஒரு தீர்க்கமான கட்டத்தில் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி துரோகிகளின் பின் அணிதிரண்டனர். அதன் மூலம். அவர்கள் ஆளும் வர்க்கத்தின் இரண்டாந்தர ஏஜண்டுகளாக செயற்படுவதை நிரூபிக்கின்றனர்.

பிற்போக்கு ஜே.வி.பி.யின் வளர்ச்சி சம்பந்தமாக, சர்வதேச பப்லோவாத இயக்கம் ஒரு கிரிமினல் அரசியல் பொறுப்பைக் கொண்டிருக்கிறது. 1964-ல் பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தனுள் லங்கா சமசமாஜக் கட்சி நுழைந்து காட்டிக் கொடுத்தது மட்டும் அல்ல இந்த குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் தோற்றத்திற்கும் வழிவகுத்தது. டிராட்ஸ்கிசத்திலிருந்து விட்டோடிய இப்படியான பப்லோவாத ஓடுகாலிகள் உண்மையில் 1966 களின் பிற்பகுதியில் ஜே.வி.பி.யை ஒரு புரட்சிகர இயக்கமென புகழ் பாடினர். இந்த திவாலான மதிப்பீடு, உலக முழுவதும் உள்ள குட்டி முதலாளித்துவ தீவிரப் போக்குகளுக்கு பப்லோவாதிகள் சரணாகதி அடைந்ததுடனும், தொழிலாள வர்க்கத்தை அதன் சொந்த ஒப்பற்ற சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில், அரசியல சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான முக்கியமான வரலாற்றுப் போராட்டத்தை கைவிட்டதுடனும் சம்பந்தப்பட்டதாக இருந்தது. டிராட்ஸ்கிசத்தின் அடிப்படை வர்க்கக் கோட்பாடுகளை பப்லோவாதிகள் காட்டிக் கொடுத்ததிற்கு நேரடியான எதிர்ப்பில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கையில் அமைக்கப்பட்டது.

ஒரு சமயம் பப்லோவாதிகளின் புகழுக்குரியவர்களாக இருந்த ஜே.வி.பி. இன்று, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஒரு உறுப்பினரை படுகொலை செய்தது மட்டுமல்லாது, டஜன்கணக்கான தொழிலாளவர்க்கப் போராளிகளையும் மற்றும் தொழிற்சங்க, தொழிலாள இயக்கங்களின் தலைவர்களையும் கொன்றுள்ளது இருப்பினும் இன்னமும் தொழிலாள வர்க்கத்தை தோற்கடித்து, ஆட்சியை தனது கைகளில் எடுக்க திறனிலலாத ஜே.வி.பி. ஒரு தேசபக்த ராணுவ அரசாங்கத்திற்காக பிரசசாரம் செய்கிறது. அதாவது தொழிலாள வர்க்கத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் ஒரு சர்வாதிகார ஆட்சிக் குழுவை நிலை நாட்டுவதற்கான ஒரு ராணுவ சதிக்காகும். ஜே.வி.பி. இந்தக் கோரிக்கையுடன், வடக்கில் விடுதலை இயக்கத்தை அழிக்க முடியாதென நிரூபித்த ஊதிப்போன வெறுப்புக்கொண்ட முதலாளித்துவ ராணுவ இயந்திரத்தினுள் முகஸ்துதி செய்து புகழ் பாட முனைகிறது.

முற்றிலும் இனவாத பேரினவாதம் ஊட்டப்பட்டு, தமிழ் ஈழத்திற்கு எதிரான போர் தொடுக்கும் தேவையுடன் விரிவாக்கப்பட்ட ராணுவம், இலங்கையின் சோசலிச பாட்டாளி வர்க்கத்தை கசப்பான வெறுப்புடன் பார்த்து ஜே.வி.பி. அனுதாபிகளுடன் சர்வசாதாரணமாக இணைகிறது ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுமாயின், தொழிலாள வர்க்க போராளிகளையும், புரட்சிவாதிகளையும் சித்திரவதை செய்யவும் கொல்லவும் தேவையான அதிரடி துருப்புகளை ஜே.வி.பி. பகிரங்கமாகவே வழங்கும்.

## ஆர். ஏ. பீட்டவலவின் வாழ்க்கை

தோழர் பீட்டவலவின் புரட்சிகர சர்வதேசியத்திற்கான போராட்டம் ஒரு அருவமான பயிற்சி அல்ல. அவரின் நினைவுக்கான கௌரவத்திற்கு, அவருடைய குறுகிய ஆனால் வீரம் செறிந்த வாழ்க்கையின் சில சம்பவங்களை இங்கு நாம் காட்டுவது தேவையானதாகும்.

1978-ல், யு.என்.பி. அரசாங்கத்தனால் தொழிலாள வர்க்கப் போராளிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட விஷப்பழிவாங்கலின் ஒரு பகுதியாக, அவர் அவரது ஆசிரியர் வேலையிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். அவரை உடனடியாக மீண்டும் வேலைக்கு அமர்த்தும்படி கோரி 700 கிராம மக்கள் பாடசாலையை முற்றுகையிட்டனர். பல வாரங்களாக மக்களை அணிதிரட்டியதும் அவர் மீதான வேலை நீக்க கட்டளையை ரத்துச் செய்யும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

அவர் மீண்டும், 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்ததன் காரணமாக அவரது வேலையை இழந்தார். அப்போது சுமார் 100,000 தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர். ஒரு புரட்சிகரப் போராளியாக, தொழிலாளவர்க்கம் திரும்பப்போராடி, அதன் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கும் திறன் உள்ளது என்ற நம்பிக்கையை அவர் ஒருபொழுதும் இழக்கவில்லை, அரசின் தாக்குதலகளுக்கு எதிராகவும், லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், நவசமசமாஜக் கட்சித் தலைவர்களின் துரோகத்திற்கு எதிராக அணிதிரட்ட மிகவும கஷ்டமான நிலைமைகளிலும் அவர், தனது புரட்சிகரப்பணியை தொடர்ந்தார்.

யு.என்.பி. மற்றும் எஸ்,எல்,எப்.பி. குண்டர்களின் இனவாத தாக்குதல்களுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடத்திய போராட்டத்தின் முன்னணியில் தோழர் பீட்டவல நின்றார். பெரும் முதலாளிகளின் அதேபோல் குட்டி முதலாளிகளின் இனவாதிகளை எதிர்த்துப் போராடுவதில் அவர் காட்டிய தைரியம், மிகவும மதிப்புப்பெற்ற ஒரு புரட்சிகரப் போராளியை கொல்லாமல் ஜே.வி.பி. அதன் பிற்போக்கு வேலையை கொண்டு நடத்த முடியாதென நன்கு உணர வைத்தது.

யு.என்,பி. குண்டர்களின் அல்லது ஜே.வி.பி.யின் கொலைத்தாக்குதலை தவிர்ப்பதற்கான முயற்சியை தோழர் பீட்டவல எடுத்திருந்த பொழுதிலும், கொலைகாரர்கள் இறுதியாக அவர்களது மரண தாக்குதலை தொடுத்தனர்.

இப்படியா ஒரு தைரியமிக்க போராளி கொலைசெய்யப்பட்டதை அறிந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம கவலை அடைந்துள்ளது, அதேசமயம், தீர்மானகரமாக எதிர்ப்புரட்சிகர அபாயத்தை தோற்கடிக்க தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதற்கான போராட்டத்திற்கு எம்மை அர்ப்பணம் செய்ய உறுதி செய்கிறோம்.

தோழர் பீட்டவலவின கொலை செய்யப்பட்டதை ஒரு பயங்கர எச்சரிக்கையாக தொழிலாள வர்க்கம் பார்க்க வேண்டுமென நாம் வலியுறுத்திக் கூறுகிறோம்.

லங்கா சமசமாஜர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், நலசமசமாஜக் கட்சி, ஏனைய திருத்தல்வாத மற்றும் இடைநிலைவாத இயக்கங்கள் அனைத்துமே, தொழிலாள வர்க்கத்தினதும், அதன் இயக்கங்களினதும் பாதுகாப்பிற்கான அரசியல் பொறுப்பை கையேற்பதை முழுமையாக கைவிட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஒருபுறம் ஜே.வி.பி. குட்டி முதலாளித்துவ பகுதியாலும், உதிரிக குண்டர்களாலும மறுபுறம் இந்திய—சிறிலங்கா ராணுவப் படைகளாலும் மிரட்டப்பட்டு, பயங்கரவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு. கொலை செய்யப்படும்படியாக தனியாக விடப்பட்டுள்ளனர்.

ல.ச.ச, கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ ச.ச. கட்சி மற்றும் ஏனைய இடைநிலைவாதிகளின் ஒரு பொதுத்தேர்தலுக்கான பரிதாபகரமான கோரிக்கையானது, தொழிலாளவர்க்கம் எதிர் கொள்ளும் பெரும் அபாயத்திற்கு சிகிச்சையாக முன் வைக்கப்பட்டுள்ளது; இது அவர்களுடைய அரசியல் பொறுப்புகளை நாசமூட்டும் வகையில் தட்டிக் கழிப்பதாகும். தொழிலாள வர்க்கத்துக்கும், நாட்டுப்புற ஏழை மக்களுக்கும் மேலாக, தமது ஆட்சியை பேண முதலாளித்துவ வர்க்கமும், அதன் குட்டி முதலாளித்துவ கூலியாட்களும், ஏற்கனவே பாராளுமனறத்துக்கு அப்பாற்பட்ட முறைகளை கையாளுகின்றனர்.

## தொழிலாள வர்க்க பாதுகாப்புப் படை

தொழிலாள வர்க்கம் அதன் ஸ்தாபனங்களை பாதுகாக்கவும், அதன் கூட்டாங்களையும், ஊர்வலங்களையும், அதன் தலைவர்களையும் பேணவும், அதன் சொந்த பாதுகாப்புக் குழுக்களை நிறுவுவதே முன்னேறிச் செல்வதற்கான வழியாகும். தொழிலாள வர்க்கம் அதன் சீர்திருத்தவாத தலைமையின் பாராளுமன்றவாத மாயைகளை நிராகரித்து அதன் சொந்தப் பாதுகாப்புக்கான ஏற்பாட்டிற்கு நடைமுறை நடவடிக்கைகளை பொறுப்பேற்காது விடுமாயின ஒரு அழிவு அதனை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

இது அனைத்து தொழிலாள வர்க்க இயக்கங்களும எதிர்கொள்ள வேண்டிய ஒரு அவசர பிரச்சனையாகும் ஸ்டாலினிச, இடைநிலைவாத, திருத்தல்வாத கட்சிகள் சம்பந்தமான எமது எந்த ஒரு விமரிசனத்தையும் பின் வாங்காமலும், சிறிது மாற்றுமலும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாள இயக்கத்தின் பாதுகாப்புக் கருதி நடைமுறைகளை சேர்த்துக் கொள்வதற்கு உடன்படுவதற்கான, அனைத்து தொழிலாளர் ஸ்தாபனங்களினதும் ஒரு கூட்டு மாநாட்டிற்கான உடனடி அழைப்பு விடும்படி ல,ச.ச. கட்சி. கம்யூனிஸ்ட் கட்சி, நவ ச.ச. கட்சி, இ.தொ. காங்கிரஸின் தலைவர்களை அழைக்கிறது.

யு.என்.பி, ஜே.வி.பி. குண்டர்களின் தாக்குதலுக்கு தாக்குதல் என்றவாறு எதிர் கொள்ள வேண்டும். ராணுவ சூழ்ச்சியாளர்களின் திட்டங்களையும், இயக்கங்களையும் கவனமாக இடைமறித்து அறிய வேண்டும். குட்டி முதலாளித்துவ பாசிச, சூறையாடுபவர்களின் பலாத்காரத்துக்கு எதிராக தொழிலாள வர்க்க இயக்க உறுப்பினர்களின் பாதுகாப்பை அவர்களதுவேலைத்தளங்களிலும், அவர்களது கிராமங்களிலும் உத்தரவாதம் செய்ய வேண்டியது தொழிலாளவர்க்க இயக்கங்களின் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பாகும்.

விரல்விட்டு எண்ணக் கூடிய ஜே.வி.பி. குண்டர்கள் கத்திகளுடனும், கைத்துப்பாக்கிகளுடனும் ஆயுதமேந்தியவாறு, இறுமாப்புடன் அவர்களது தொழிலாள விரோத, இனவாத குறிக்கோள்களை அடையும் நோக்கத்துடன், தொழிலாளர்களை அவர்களின் வேலைத் தளங்களிலிருந்து வெளியேறும்படி உத்தரவிடவும், எதேச்சாதிகாரமாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவும் ''உரிமையை'' எடுத்

★12ம் பக்கம் பார்க்க

★3ம் பக்கத் தொடர்ச்சி

கியோஹ்டன் லண்டன் பைனான்ஷியல் டைம்ஸ் பத்திரிக்கைக்கு பதில் கொடுக்கும் போது விளக்குகிறார். ''மிகச் சிறிய எண்ணிக்கையில மக்களில் சிலரை கொள்கை வகிக்கும் உயர் மட்டத்தில'' ஒன்று சேர்ப்பதன் மூலம் சர்வதேச பொருளாதாரக் கொள்கையின் ஒருங்கிணைப்பை சிறப்பான முறையில் சாதிக்க முடியும். அவ்வகையான பேச்சுக்கள் மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார் பைனான்ஷியல் டைம்ஸ் மேலும் கூறுகிறது. இந்தக் கருத்து மிகவும ஜனநாயகபூர்வமானதாக ஒலிக்கவில்லை என்பதை திருவாமர் கியோஹ்டன் ஒத்துக்கொள்கிறார். ஆனால் அது தான்நடைமுறை ரீதியானது — சுதந்திரமான தேசிய இறைமைகளால் இன்னும் நடத்தப்படுகின்ற உலகப் பொருளாதாரத்தில் ஏதாவது சாதிக்க வேண்டுமானால் என்றார்.

இவ்வாறு, முதலாளித்துவம் அதன் உலக அமைப்பின் நெருக்கடிகளுக்கு வழங்கும் ஒரேயொரு 'தீர்வு' வெளிப்படையாக விவாதிக்கப்பட முடியாததாக இருக்கிறது. ஏதுஏனென்றால் அது ஒவ்வொரு நாட்டிலும உள்ள தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக வேலைகளைப் பெருமளவு அழித்தல்,வாழ்க்கைத்தரத்தை அழித்தல், மற்றும் அரச வன்முறையையும் சர்வாதிகாரத்தையும் பயன்படுத்துதல் ஆகிய கூட்டாகத் தொகுக்கப்பட்ட வன்முறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முடிவில் இத்தத் ''தீர்வு'' கடந்த காலத்தைப் போன்று, தொழிலாள வர்க்கத்தை அழிப்பதற்கும் ஒரு புதிய உலக யுத்தத்திற்கும் இட்டுச் சென்று தானுகவே தீர்த்துக் கொள்கிறது. தங்களது முதலாளித்துவ அமைந்பு முறையைத் தக்க வைப்பதற்கான முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தொடர்பாக முதலாளித்துவ பிரதிநிதிகள் மனச் சோர்வடைந்து அவநம்பிக்கையுடன் பேசும்வேளை ஒரே ஒரு சர்வதேச வர்க்கமாகிய தொழிலாள வர்க்கத்தால் மட்டுமே முதலாளித்துவத்தின் மரண நெருக்கடியை, காலத்துக்குப் பொருந்தாத தேசிய அரசுகளையும்,மற்றும் உற்பத்தி சக்திகளின் தனி உடமையையும உலக சோசலிசப் புரட்சியின் மூலமாக தகர்த்து எறிந்து ஒன்றிணைக்கப்பட்ட ஒரு உலக சோசலிசப் பொருளாதாரத்தை நிர்மாணிப்பதன் மூலமாக தீர்க்க முடியும, தீர்ந்தே தீரும. இந்த வேலைத் திட்டத்திற்காக போராடுவது ஓர்க்கர்ஸ் லீக்கும், உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு மட்டுமே.

★4ம் பக்கத் தொடர்ச்சி

ஜக்சனிற்கு ஆதரவான பிரச்சாரம், வலதுசாரிப் பக்கம் செல்லும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளை கவர்ந்தது; ஆழமாகிச் செல்லும் முதலாளித்துவ நெருக்கடியின் ஆதிக்கத்தின் கீழும், தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பினுலும முதலாளித்துவ அரசியலின் முழுமையான மேல் கட்டுமானத்துடன தொடர்புடையதாக அப்பிரச்சாரம் இருந்தது. இப்படியாக, குட்டி முதலாளித்துவ பிரிவுகளின் சமூக இயக்கமானது, ஜக்சனின் முகாமிற்குள் சென்றதானது. அதனுடன் சேர்த்து குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களையும் அவை சோசலிஸ்டுகள் என தமமை அழைத்துக் கொண்டாலும், ஜனநாயக கட்சியிலிருந்து ''சுதந்திரமானவை'' என காட்டிக் கொண்டாலும்- அள்ளிச் சென்றுள்ளது.

24 வருடங்களில் முதன் முறையாக கம்யூனிஸ்ட்கட்சி, ஜனாதிபதி தேர்தலில் பங்கெடுக்காது விட்டுஜக்சனிற்கு ஆதரவளித்தது; ஆனால் இது நிகழ்வுப் போக்கின் மிக வெளிப்படையான தோற்றப்பாடு மட்டுமே ஆகும். ஜக்சன் பிரச்சார இயக்கத்தில் ஏனைய குட்டி முதலாளித்துவ தீவிரவாத பிரிவினரும் இழுபட்டுச் சென்றனர்.

படிப்பகம்

## தோழர் பிட்டவலவின் நினைவு நீடூழி வாழ்க!

துக் கொண்டுள்ளபோது, தொழிலாளவர்க்கக் கட்சிகள் தங்களுடைய கைகளை கட்டியவாறு அலட்சியத்துடன் ஒதுங்கி நிற்பது அனுமதிக்க முடியாதது ஆகும்.

ல.ச.ச. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இ.தொ.கா. நவ.ச.ச. கட்சிகளின் கோழைத்தனமான செயலற்ற நிலை தொழிலாளர்களை தனித்தனியாக கொடுமையாக நடத்தும் நிலைமைக்கு விட்டுள்ளது. ஒருபுறம் அவர்களை ஆலைகளிலிருந்தும், வேலைத்தலங்களிலிருந்தும் வெளியேறும்படி ஆயுதம் தரித்த ஜே.வி.பி. குண்டர்கள் உத்தரவிடுகின்றனர், மறுபுறம் அவர்களை மீண்டும் வேலைக்குச் செல்லும்படி ஆயுதம் தரித்த ராணுவத்தினர் உத்தரவிடுகின்றனர். இவ்வாறாக தொழிலாளர்கள், ஜயவர்த்தவேக்கும் ஜே வி பி. க்கும் இடையிலான சிடுமூஞ்சித்தனமான காதல்—சண்டையில், பகடைக்காய்களாக பயன்படுத்தப்படும் பொழுது, சீர்திருத்தவாதிகள் சுதந்திரமாக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட மறுக்கின்றனர்.

உண்மையில், தொழிலாள வர்க்கத்தின் பாதுகாப்பு சம்பந்தமான எந்த ஒரு போராட்டத்தையும் ஆபத்தை உணர்ந்தும் பொருட்படுத்தாது சீர்திருத்தவாத தலைமைகள் தவிர்த்துக் கொண்டிருக்கையில், பல சமயங்களில் அவர்கள், ஜே வி பியின் இனவாத பிரச்சாரத்துடன் தொழிலாளர் இயக்கத்தை இணைக்க ஒப்புக் கொண்டனர். நவம்பர் 7-ன் வாரத்தில், ஜே வி பி யின் பயங்கரவாத நடவடிக்கைகளின் உச்சக் கட்டத்தில், பிரபலமான பப்லோவாதியான பாலா தம்புவின் தலைமையின் கீழான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் (CMU), குட்டி முதலாளித்துவ இனவாதிகளினால் முன்னெடுக்கப்பட்டதை ஒத்த ஒரு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒருநாள் பொதுவேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விட்டதன் மூலம், ஜே வி பி யுடன் சந்தர்ப்பவாத ரீதியில் பொருந்தச் செய்தது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமையின் கீழிருக்கும் மத்திய வங்கி ஊழியர் சங்கம் மட்டுமே குட்டி முதலாளித்துவ பயங்கரவாதிகளிடம் தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரத்தை சரணடைய மறுத்ததுடன், ஜே வி பி யினால் அழைக்கப்பட்ட வேலை நிறுத்த நடவடிக்கைகளில் பாட்டாளி வர்க்கம் பங்கு கொள்வதை சமரசமின்றி எதிர்த்தது.

'ஆம்பியன் தாக்குத சம்பந்தமாக தொடக்க நாட்களில் தொழிலாள வர்க்க மத்தியில் ஒரு குறிப்பிட்ட அளவு அரசியல் குழப்பம் இருந்த பொழுதிலும், சீக்கிரமாக அதஸ் தொழிலாள விரோத தன்மை வெளிப்படத் தொடங்கியதும் சாதாரண உழைக்கும் மக்களின் வளர்ந்து வரும் எதிர்ப்பை எதிர் கொண்டது. தொழிலாள வர்க்க எதிர்ப்புக்கான வளர்த்துவரும் அடையாளங்களுக்கான ஜே.வி.பி. யின் வெறித்தனமான பிரதிபலிப்பானது—சுமார் 20 போக்குவரத்து தொழிலாளர்களை அது கொலை செய்ததன் மூலம் அம்மணமாக வெளிப்படுத்தப்பட்டது. இது குட்டி முதலாளித்துவ ஆயுதம் தரித்த குண்டர்களுக்கு எதிரான சிறிலங்கா பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்திற்கான தீர்மானத்தை ஆழப்படுத்தியது

கடந்தமாத நிகழ்ச்சிகள் தொழிலாள வர்க்கத்தின் நனவில் ஒரு அழிக்க முடியாத பதிவை விட்டுச் சென்றுள்ளது. ஜே வி பி யின் முழு பிற்போக்குத் தன்மை பற்றி ஒரு விலைமதிப்பிட முடியாத பாடம் கற்கப்பட்டுள்ளது. இப்போது அவசியமான நடைமுறை முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

நாம் மீண்டும் கூறுகிறோம்: அனைத்து தொழிலாள வர்க்க இயக்கங்களின் ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கி, தொழிலாள இயக்கத்தின் பாதுகாப்பிற்கான ஸ்தூலமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நேரம் வந்துள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடைமுறை ஏற்பாட்டிற்கு தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் உள்ள அதன் அரசியல் எதிராளிகளுடன் முழுமையாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

இருந்தபோதிலும். எந்த ஒருவகையான பரஸ்பர அரசியல் மன்னிப்புக்கு நாம் பிரேரிக்கவும் இல்லை, வேண்டிக் கொள்ளவும் இல்லை. எமது எதிராளிகள் எம்மை விமர்சிக்கும் சுதந்திரம் உண்டு அதேபோல் அவர்களை விமர்சிக்கும் உரிமையையும் நாம் வைத்துக் கொள்கிறோம். உண்மையில், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நவ சம சமாஜக் கட்சி ஆகியவற்றினால் பின்பற்றப்படும் திவாலான பிற்போக்கான அரசியல் நிலைபாட்டை தோற்கடிக்கும் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது!

இரண்டு கூட்டரசாங்கத்தில் பங்கெடுத்தல், 1972ல் பிற்போக்கு அரசியல் அமைப்புக்கு இழிவான ஆதரவு அளித்தல், தமிழ்மக்களின் தேசிய உரிமைகளை காட்டிக் கொடுத்தல், இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளித்தல் இவ்வாறான ஸ்டாலினிச வாதிகளின் மற்றும் ல ச சகட்சி சீர்திருத்தவாதிகளின் அசிங்கமான வர்க்க சமரச கொள்கைகள் இல்லாதிருந்திருக்குமாயின், நாட்டுப்புறவறிய மக்கட் பிரிவுகளின் மத்தியில், ஜே வி பி ஆதரவு எடுப்பது என்பது சாத்தியமாக இருந்திருக்க மாட்டாது.

பாசிசஅபாயத்திற்குஎதிராக தொழிலாள வர்க்கத்தைப் பாதுகாக்க மிகத் திறமான பாதுகாப்பு நடவடிக்கைகள் கூட போதுமானதல்ல சீர்திருத்தவாத தலைவர்களின் சந்தர்ப்பவாத கொள்கைகளின் பலனாக தொழிலாள வர்க்கத்திலிருந்து வேறுபடுத்தப்பட்ட, விரக்தியுற்ற குட்டி முதலாளித்துவ மக்கட் பிரிவினர் மத்தியிலேயே ஜே.வி பி அதன் அரசியல் ஆதாரத்தை பெறுகிறது, ஆனால் இன்னமும் ஜே வி பி ஒரு வெகு ஜன இயக்கம் அல்ல ஏகாதி பத்தியற்கும், தேசிய முதலாளித்துவத்திற்கும் எதிராக நாட்டுப்புற கிராமப்புற வறியோரை அணிதிரட்ட பாட்டாளிவர்க்கத்துக்கு இன்னமும் நேரம் இருக்கிறது.

அதனால்தான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் துணிகர பாதுகாப்புப் பணிக்கான அழைப்பை விடுத்து அதனை கையேற்கையில், ல ச ச கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைதொழிலாளர்காங்கிரஸ் ஆகியன இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நிராகரிக்கும்படியும், யு என் பி அரசாங்கத்துடனும், முதலாளித்துவ கட்சிகளுடனும் துண்டித்துக் கொண்டு ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடும்படி கோரும் அதன் அரசியல் கிளர்ச்சியை உக்கிரப்படுத்தும்.

தொழிலாளர் விவசாயிகளின் ஆட்சிக்கான சாதனங்களாக சோவியத்துகளை உருவாக்கும்படி நாம் அழைக்கிறோம், அவை முதலாளித்துவ அரசை தாக்கி வீசும்.

சிங்கள தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் முழு இந்திய உபகண்டத்தையும் அமிழ்த்தும் ஒரு உலக நெருக்கடியின் வரலாற்று சாரம்சத்தினுள்ளேயே விரிவடைகின்றது. பர்மா. பங்களாதேஷ். பாகிஸ்தான், இந்தியா, சிறிலங்காவின் எழுச்சிகள் அனைத்துமே இரண்டாம் உலகப்போரின் இறுதியில் பிரிட்டன் ஏகாதிபத்தியத்தாலும், அதன் தேசிய முதலாளித்துவ அடிவருடிகளாலும் உருவாக்கப்பட்ட பிற்போக்கு அரசு அமைப்புகளின் மரண வேதனையை உறுதியாக நிரூபிக்கின்றனர், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் வரலாற்று ரீதியாக நியாயமான அபிலாசைகளை குரூரமாக ஒடுக்கியதானது இந்திய உபகண்டத்தில் முதலாளித்துவ சொத்து மற்றும், ஏகாதிபத்தியத்தின் பூகோளரீதியான நலன்களை பேணுவதன் தவிர்க்கமுடியாத விளைபயனுக்கும் இன்று ஏகாதிபத்தியமும் அதன் முதலாளித்துவ அடிவருடிகளும், பல்வேறு வகையான வகுப்புவாத வெறியை கட்டவிழ்த்து விடுவதன் மூலமும் மிகவும் காட்டுமிராண்டித்தனமான ராஜ்யங்களை உருவாக்குவதன் மூலமும் மட்டுமே உயிர் பிழைக்க முடியும், சாரம்சத்தில், இந்நிகழ்வுப் போக்கின் ஒரு வெளிப்பாடே ஜே வி பி ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் மூச்சுத்திணறவைக்கும்திட்டங்களுக்கு முழுமையான மாற்றீடு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் முன்னெடுக்கப்படும் சர்வதேச சோசலித்துக்கான புரட்சிகர முன்நோக்கு ஆகும். இந்திய உபகண்டத்தின் அனைத்து ஒடுக்கப்படும் மக்களின் எதிர்காலம், சோசலிச பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் அவற்றை புரட்சிகர மறு இணைப்பு செய்வதிலயே தங்கியுள்ளது.

இந்த முன்னோக்கே தோழர் பீட்டவலவின் வாழ்க்கையை வழி நடத்தியது, அவருடைய போராட்டம் இந்திய உபகண்டத்தில். உண்மையில் உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு ஒரு உற்சாகமாக இருக்கட்டும்.

இதனால் நாம் மிகவும் துணிகரமான மற்றும் வர்க்க நனவுடைய தொழிலாளர்களையும் இளைஞர்களையும் புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகத்தில்இணைவதன் மூலம் உலக சோசலிசப் புரட்சி பதாகையின் பின்னால் அணி திரளும்படி அழைக்கிறோம்.

## பி. & சி. மில்லில் தொழிலாளர்களுக்கு எதிரான நிர்வாகத்தின்-குசேலர் தலைமையின் கூட்டுச்சதியை தோற்கடி!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட, இந்திய டிராட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தொழிற் சங்கப்பிரிவான சோசலிசத் தொழிலாளர் அணியின் பி & சி மில் கிளையின் வாயிற் கூட்டங்கள் நவம்பர் 16,17 தேதிகளில் பி அண்டு சி மில்லின் இரு வாயில்களிலும் நடைபெற்றது. வாயிற் கூட்டங்களுக்கு சோசலிசத் தொழிலாளர் அணியின் செயலாளர் தோழர் மோசஸ் ராஜ்குமார் தலைமை வகித்தார். மேலும் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தலைமை உறுப்பினர்களான தோழர் பிரகாஷ்,தோழர் ராம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.



பி. அண்டு சி. வாயில் கூட்டத்தின்போது தோழர் மோசஸ் உரையாற்றுகிறார்

'உலக முதலாளித்துவப பொருளாதார நெருக்கடியும் பி அண்டு சி ஆலை நிலைமையும் என்ற தலைப்பின் கீழ் வாயிற் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பி அண்டு சி தொழிலாளர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் என்ற தலைப்பில் சிறு துண்டு பிரசுரம் சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்டு, ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் மத்தியில் விற்பனையாகியது. அந்நூலில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் முன்வைக்கப்பட்ட புரட்சிகர வேலைத்திட்டங்களையும் முன்நோக்குகளையும் விளக்கும் அடிப்படையிலும், துரோக குசேலர் தலைமைக்கும், அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் ஸ்டாலினிச 'ஐக்கிய குழு' மாவோவாத 'தொழிலாளர் முன்னணியின் காட்டிக் கொடுப்புகளை அம்பலப்படுத்தி, புரட்சிகர டிராட்ஸ்கிசத தலைமையை கட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் கூட்டத்திற்கு தலைமை வகித்த தோழர் மோசசும் மற்றைய தோழர்களும் பேசினார்கள்.

தோழர் மோசஸ் உரையின் ஒரு பகுதி "1981 இல் இதே குசேலர் MLU வின் தலைவராக இருந்தபோது வேலைப்பளுவை தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையெனில் மில்லை மூடிவிடப்போவதாக அச்சுறுத்தியதை நினைவுபடுத்திப்பாருங்கள். குசேலர் அப்பொழுது ஆட்டோக்கள், டாக்சிகள், பஸ்கள் எல்லாம் ஓடாது முழு அரச நிர்வாகமும் ஸ்தம்பிக்க நேரிடும் என்றெல்லாம் வாய்ச் சவடால் அடித்தார். இவ்வகையான ஆவேசப்பேச்சுகள் இருந்த போதிலும் நாம் 6 மாதப் பட்டினிக்கு உள்ளாக்கப்பட்டது மட்டுமல்லாமல் குசேலரால் கையெழுத்திடப்பட்ட அடிமை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைக்குத் திரும்புமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்த ஒப்பந்தம் பல தசாப்தங்களான போராட்டத்தில் நாம் வென்றெடுத்திருந்த உரிமைகளைப் பறித்தது. இந்த ஒப்பந்த அடிப்படையில் 'கமலரத்தினம் அவார்டை' மில்லில் அமுல் செய்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் அன்வருக்கு சிபிஐ யில் இருந்த கல்யாண சுந்தரம் சி பி எம் ஐச் சேர்ந்த ராமமூர்த்தி போன்ற ஸ்டாலினிசத் தலைவர்களால் கையொப்பமிடப்பட்டது."

★அடுத்த இதழில் தொடரும்

**ஸ்டாலினிச சி, பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான அவற்றின் உறவுகளைத் துண்டித்து, தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி !**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக இ.பா. வெண்மணி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு சுப்பீரியர் கமர்ஷியல் எண்டர்பிரைசஸ் அச்சகத்தில் க. திருநாவுக்கரசு அவர்களால் அச்சிடப்பட்டது.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 70, D-4300 Essen 1, West-Germany